404

Registered M—1390.

OFFICE OF THE ... 3-MAY 1919 MADRAS

A
TAMIL LAW JOURNAL

KNOWN AS

தென் இந்திய
வியவகார சிந்தாமணி.

Vol-IV] March—1919. [No-3.

PUBLISHED BY

S. T. PALDANO.

N. Subramania Aiyar—(*Editor & Manager.*)

All rights reserved.

PRINTED AT
The Kamalanayagi Press, Vepery,
Madras N. C.

பொருளடக்கம்.

பக்கம்

I. ஸி.பி.ஸி. ஆர்டர் 21-ரூல் 54-ன்படி ஜப்திக்கட்டளையை விளம்பரப்படுத்துமுன் எதிரி ஜப்தியான தகவல் தெரியாதவராய் ஜப்தி சொத்தை குத்தகைக்கு ஒப்படைத்தது சட்ட விரோதமில்லை ... 25

II. சாட்சியொப்பமில்லாத ஒத்திப்பத்திரத்தை நிராகரித்து சிலகாலம் சுவாதீனத்திலிருந்த ஒத்திதாரனை மூன்றாவது மனிதன் வெளிப்படுத்தினதால் ப்ராபர்டி ஆக்டு 68 (b)-யின் படி தவறுதலுக்காகக் கடனாளியிடமிருந்து ஒத்தித் தொகையை வாபீஸ் அடைய லாயக்கில்லை. ... 25

III. அடமான வியாஜ்ஜியத்தில் பிரதம டிக்கிரீயில் குறிக்கப்பட்ட கெடுத்தேதியில் ஏற்படுகிற மொத்த பாக்கியின்பேரில் (அசல் வட்டி செலவு தொகையுள்பட) சாதாரணமாய் அரை வட்டி சேர்த்து வசூலிக்கத்தகும். வட்டி விகிதம் கோர்ட்டார் யுக்தானுஸாரத்தைப் பொருத்ததாகும். 100-க்கு 12-விகிதம் ஷரத்து வட்டி ஏற்பட்டாலும் 12-விகிதமுள்ள முன் கடனைத் தீர்த்த விஷயத்தால் மேற்கூறிய அதிக வட்டியானது ஷரத்து வட்டியாக மதிக்கத்தகாது. ... 27

IV. பார்ட்டிகள் வழக்கின் தீர்மானத்தை ஜட்ஜியவர்களுடன் மூன்று மத்தியஸ்தர்களிடம் ஒப்பிவித்தால் அவர்களால் ஏற்படும் அவார்டுக்கும் அதை அனுஸரித்த டிக்கிரீகளுக்கும் இருதாத்தாரும் கட்டுப்படவேண்டும். ... 28

V. குத்தகை சொத்தை சுவாதீனமடையுமுன் முடிக்கவேண்டிய கடமைகள் யாதொன்றும் குத்தகை தஸ்தாவேஜில் கண்டிராதபட்சத்தில் குத்தகைதாரன் ஒரு பந்தகக்கடனைத் தீர்ப்பதாய் ஒப்புக்கொண்டபடி நடக்காதபோதிலும் ஷை சொத்தை ஒத்திக்கு வாங்கிக்கொண்டு பந்தகக்கடனைத் தீர்த்த ஒத்திதாரனிடமிருந்து ஷை சொத்தை சுவாதீனப்படுத்திக்கொள்ள லாயக்குண்டு. ... 30

VI. ஸர்க்கார் உத்தியோகஸ்தன் உத்தியோக தோரணையில் நடத்தும் நடவடிக்கையில் மாச்சரியத்தால் எதிரிக்குத் தீங்கு செய்ததற்காக நஷ்டப்பரிகார தாவா செய்யுமுன் ஸி.பி.ஸி. 80-வது பிரிவின்படி முன் நோடீஸ் கொடுக்கவேண்டும். ... 32

VII. போலீஸ்டேஷனுபிஸர் தன் இலாகாவுக்குள் ஆனால் ஸ்டேஷனுக்கு வெளியில் டியூடி பார்க்கும் சமயத்திலும் ஸ்டேஷனுபிஸர் என்ற நிலைமையிலிருப்பவரே. ஸ்டேஷனில் அவருக்கடுத்தபடியான உத்தியோகஸ்தன் அச்சமயத்தில் ஸ்டேஷனுபிஸர் நிலைமையை தரித்து டியூடி நடத்தலாம். சரியான டியூடி செய்கிற ஆபிஸருக் குதவி செய்கிறவர்கள் நஷ்டப்பரிகாரத்திற்குப் பாத்திரால்ல. ... 36

VIII. பெயரிரவலாய் யாதொரு அடமான தஸ்தவேஜை மேடோவர் வாங்கிக்கொண்டவனும் அடமான கடனுக்காக எதிரியின்பேரில் தாவா செய்ய லாயக்குண்டு. ... 37

IX. ஸி.பி.ஸி. ஆர்டர் 18 ரூல் 5-6-ன்படி வாக்குமூலத்தைப் படித்துக்காட்டி சரி என்று ஒப்புக்கொள்ளப்படாத வாக்குமூலத்தில் கண்ட விஷயங்கள் பொய்யென்று சொல்லி அந்த சாட்சியைத் தண்டிப்பது பிசகு. ஸெஷனில் மட்டும் விஜாரிக்கத்தக்க கேஸாக இருந்தாலல்லாது ஜட்ஜியவர்கள் தன்னுடைய கோர்ட்டுக்குக் கமிட் செய்யும்படி கட்டளையிடத் தகாது. கிரி. பி. ஸி. 239-ன் கருத்தில் பிரதம விஜாரணை கூட்டாய் நடத்தலாம். ... 38

X. தகப்பன் வாங்கிய கடன் தொகை துர்விநியோகத்திற்கு உபயோகப்பட்டதாயும் அதற்கு சம்பந்தமாய் வாங்கப்பட்டதென்றும் அக்கடன் பொறுப்பை நிராகரிக்கிற மகன் ருஜுப்படுத்தவேண்டும். தகப்பன் கடன் வாங்கவேண்டிய அவசியமில்லையென்று ருஜுப்படுத்தினால் போதாது. கடனுக்காக செலுத்தும் தொகை இன்னவகைக்கென்று சொல்லப்படாத பட்சத்தில் வட்டி பாகத்திற்காகச் செல்லுவைத்து மிகுதியை அசலுக்குச் செல்லுவைக்கலாம். .. 40

XI. ஏலத்தொகையைக் கோர்ட்டில் கட்டி ஏலத்தை ரத்து செய்ய விண்ணப்பம் கொடுத்த டிக்கிரீ பாக்கிதாரன் (சொத்துக்காரன்) விண்ணப்பத்தேதியில் ஏலமான சொத்தை விக்கிரயம் செய்து கொடுத்தும் அது ரெஜிஸ்டராகாதபடியால் சொத்து பாத்தியதையை இழக்கவில்லை. ஏலத்தை ரத்து செய்ய லாயக்குண்டு. பின்னால் அதே பார்ட்டிக்கு ஏற்பட்ட ரெஜிஸ்டர் தஸ்தவேஜானது விண்ணப்பத்தேதியிலிருந்த நிலைமையைக் கெடுக்காது. ... 40

XII. கணவன் மனைவிக்கு ஒரு பகுதி சொத்தையும் ஸ்வீகார புத்திரனுக்கு ஒரு பகுதியுமாய் எழுதி வைத்த ஏற்பாட்டினால் மனைவிக்கு ஸர்வ ஸ்வதந்திர பாத்தியமுண்டாய்விட்டபடியால் அவள் அதைப்பற்றி உயில் எழுதி வைக்கலாம். ... 42

தென் இந்திய
வியவகார சிந்தாமணி.

224707

Vol-IV] மார்ச்சு—1919. [3-ம் பிரதி.

3-MAY 1919
MADRAS

பிலிப்ஸ் & கிருஷ்ணன்-J.J.

(கர்நூல் ஜில்லா)

S.A. 511 of 1918-17 ஜனவரி 1919.

பூஞாராம நாயுருடு vs போயபெத்த பாஸப்பா.

வி. பி. ஸி. 64-வது பிரிவின்படி யாதொரு ஸ்தாவர சொத்தானது டிக்கிரீபாக்கிக்காக ஜப்தியான பிறகு ஆனால் ஜப்திக்கட்டளை விளம்பரப்படுத்தி எதிரிக்கும் மற்றவர்களுக்கும் ஜப்தியான தகவல் தெரிவிக்கப்படுமுன் டிக்கிரீபாக்கிதாரன் தன்னுடைய சொத்தை குத்தகைக்கு ஒப்படைத்துவிட்ட நடவடிக்கை சட்ட விரோதமென்றஆட்சேபனை எற்றுக்கொள்ளப்படவில்லை வி. பி. வி ஆர்டர் 21-ரூல் 54-ன்படி ஜப்திக் கட்டளையைப் பிரசுரப்படுத்தவேண்டும். ஜப்தி உத்தரவான தகவல் மேற்கண்ட விதமாய் விளம்பரமானால் மட்டும் எதிரிக்குத் தெரியவந்ததாகவும் அதற்குப் பின் சொத்தைப்பற்றி யாதொரு பாராதீனமும் செய்யக்கூடாதென்று தடுக்கப்படுகிறான். பாராதீனம் செய்யக்கூடாதென்று மரியல் கட்டளையின் தகவல் தெரியாமல் எதிரி நடத்தியிருக்கிற குத்தகை எற்பாடானது வி.பி வி. 64-வது பிரிவின் அம்சத்திலடங்கியதல்ல. எதிரியின் மோசக்கருத்தைப்பற்றி கவனிக்க வேண்டிய அவசியம் 64-வது பிரிவில் கிடையாது. இத்தியாதி காரணங்களைச் சொல்லி குத்தகை தஸ்தவேஜை சட்ட விரோதமல்லவென்று காயப்படுத்தினார்கள். (36-M L.J.284.)

—0—

ஓல்ட் பீல்டு & சேஷகிரி அய்யர் - J.J.

(மதுரை ஜில்லா)

S. A. 1270 of 1918-31 ஜனவரி 1919.

அங்கய்ய குப்பய்யா vs பெரிய கருப்பகவுண்டன்.

1-ம் பிரதிவாதியாகிய பெரிய கருப்ப கவுண்டன் குப்பையரென்ற வாதிக்கு யாதொரு ஸ்தாவர சொத்தை ஒத்தி எழுதி வைத்த தஸ்தவேஜில் சாட்சி யொப்பம் போடப்படவில்லை. ஆனால் வாதி சொத்தின் சுவாதீனமடைந்து சிலகாலம் அனுபவித்து வந்தபிறகு 2-4-ம் பிரதிவாதிகள் ஷெ சொத்தில் தங்களுக்கு மேலான பாத்திய மிருப்பதாய்ச் சொல்லி வாதியை அப்புறப்படுத்திவிட்டு சொத்தின் சுவாதீனத்தைக் கைப்பற்றிக்கொண்டார்கள். அதன்பேரில் வாதி 1-ம் பிரதிவாதிக்குச் செலுத்தியிருந்த ஒத்திக் கடன் துகையை வாபீஸ் அடையவேண்டுமென்று டி. மு. கோர்ட்டில் தாவா செய்து அசல் அப்பீல் இரண்டிலும் தோல்வியடைந்து ஹைகோர்ட்டில் 2-வது அப்பீலுக்கு வந்ததில் சரியான முறையை அனுஷ்டித்துத் தான் செலுத்திய துகையை வசூலிக்க தாவா செய்ய அனுமதி பெற்று இந்த தாவாவை உபித்டிரா செய்து கொள்ளும்படியான சவுகரியம் பெற்றுக்கொண்டார். முறை தப்பி செய்த தாவாவினால் 1-ம் பிரதிவாதிக்கு நேர்ந்த செலவுகள் முழுவதையும் செலுத்திவிட்டு மறுதாவா செய்யலாமென்று உத்தரவளிக்கப்பட்டது. ஹைகோர்ட் தீர்மானத்தின் காரணச் சுருக்கமாவது:—

ஒத்திப்பத்திரத்தில் சாட்சியொப்பமில்லாதபோதிலும் 2-4-ம் பிரதிவாதிகள் 1-ம் பிரதி

வாதியின் ஏவுதல், உதவி, அல்லது தூண்டுதலின்பேரில் வாதியினிடமிருந்து ஒத்தி சொத்தைப் பிடுங்கிக்கொண்டதாகப் பிராதில் சொல்லப்படாத காரணத்தால் வாதிக்கு 1-ம் பிரதிவாதியின் பேரில் துகையின் வாபீஸுக்காக தாவா செய்யத் தகாதென்று சொல்லவேண்டும். 2-4-ம் பிரதிவாதிகள் தங்களுக்கு மேலான பாத்தியமிருப்பதாய்ச் சொல்லி சொத்தைப் பிடுங்கிக்கொண்டார். இவ்வித சந்தர்ப்பத்தில் ஒத்தி தஸ்தவேஜானது முறைப்படி ஏற்பட்டிருந்தபோதிலும் வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத் தகாதென்று சொல்லவேண்டும்.

44 கல்கத்தா 388-க்குச் சரியான 32 M.L.J. 39-ல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற பிரிவி கௌன்ஸில் தீர்மானத்தைக் காட்டி வாதி ஒத்தி அடமான பாத்தியதையை நிலை நாட்டக்கூடாதபோனாலும் அதாவது 2-4-ம் பிரதிவாதிகளின் பாத்தியதையை ஆட்சேபிக்க யோக்கியமில்லாதபோனாலும் தான் செலுத்தியிருக்கிற கடன் துகையை வாபிஸ் அடையத் தகுமென்று வாதிக்கப்பட்டது. ஆனால் பிரிவி கௌன்ஸில் கேஸில் ஒத்தி வைக்கிறவன் மற்றவர்களைத் தூக்கிவிட்டு வாதியின் சுவாதீனத்தைப் பிடுங்கிக்கொள்ளச் செய்தமையால் வாதிக்குத் துகையை வாபிஸ் செய்யத் தகுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஒத்தி பாத்தியதையை மற்றப்படிக்கு நிலை நாட்டக் கூடுமானால் சொத்துக்காரனுடைய தூண்டுதலால் வாதி சுவாதீனத்தை இழந்தால் ஒத்தித் துகையை வாபீஸ் கேட்கலாம். ப்ராபர்டி ஆக்டு 68-(B)-வது பிரிவைப் பிரயோகிக்கத் தகும். ஆனால் பிரிவி கௌன்ஸிலார் ஒத்தி தஸ்தவேஜின் முறை தப்பாகவும் செல்லத் தகாதென்றும் ஏற்பட்டபோதிலும் ஒத்தி வைத்தவனே சுவாதீனத்தைக் கைவிடுவதற்குக் காரணமாக இருந்தால் ஒத்தித் துகைக்கு அவன்மீது தாவா செய்யலாமென்று விளம்பியிருக்கிறார்கள். இந்தக் கேஸில் 1-ம் பிரதிவாதியின் ஏவுதல் யாதொன்றும் கிடையாதாகையால் பிரிவி கௌன்ஸிலாருடைய அபிப்பிரா[illegible]சகு டிக்கிரீயளிக்கத் தகாது.

ப்ராபர்டி ஆக்டு 68 (C) – ன்படி வாதிக்குரிய ஆதாரத்தை இழந்துபோக நேரிட்டமையால் வாதி செலுத்திய துகையை வாபீஸ் அடையலாமென்று வாதிக்கப்பட்டது, அந்நியன் வாதியின் ஆதாரத்தைப் பிடுங்கிக்கொண்டதாக பாவித்தாலும் துகையின் வாபீஸுக்காக தாவா செய்யலாயக்குண்டாக தாவா செய்யுமுன் 1-ம் பிரதிவாதிக்குத் தெரிவித்துத் தனக்கு வேறு ஆதாரம் சொத்து ஜாமீன் ஏற்பாடு செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டு அப்படி நடவாத பட்சத்தில் மட்டும் துகையை வாபிஸ் கொடுக்க வேண்டுமென்று தாவா செய்யலாம். இந்தக் கேஸில் வாதி முன்னாடி 1-ம் பிரதிவாதியை மறு ஜாமீன் கொடுக்கவேண்டுமென்று கேட்டதாகக் காணப்படவில்லை. இந்த வாதம் பிரயோஜனமில்லை.

மூன்றாவதாக 2-4-ம் பிரதிவாதிகளின் பாத்தியதையை ஆட்சேபித்து எதிர் வழக்காடும்படி 1-ம் பிரதிவாதியைக் கேட்டும் அவர் அலட்சியமாயிருந்து விட்டபடியால் 68 (B)-வது பிரிவின்படி ஒத்தித் துகையை வாபிஸ் செய்யத் தகுமென்று வாதிக்கப்படுகிறது. ஒத்தி சொத்தை வாதி இழந்தபிறகு எதிர் வழக்காடும்படி கேட்டுக்கொள்ளப்பட்டதாகக் காணப்படுகிறது. வாதி ஒத்தி சொத்தின் சுவாதீனத்தைக் கைவிடுமுன் 1-ம் பிரதிவாதிக்குச் சகாயமாய் நின்று எதிராட்சேபனை செய்யத் தவறினால் வாதிக்கு 1-ம் பிரதிவாதி வாதியின் பேரில் 68 (B)-வது பிரிவின்படி பரிகாரம் கிடைக்கத் தகும். இழந்துபோன சுவாதீனத்தை திரும்பவும் வாங்கிக்கொடுக்கவேண்டியது 1-ம் பிரதிவாதியின் கடமையாக 68 (B)-யின் கருத்தில் நிதானிக்கத் தகாது. 7 I.C. 251-ல் அடமானத் தேதியிலேயே 1-ம் பிரதிவாதியின் தவறுதல் ஏற்பட்டிருந்தது. அந்தத் தீர்மானம் உபயோகப்படாது. ப்ராபர்டி ஆக்டு 68-வது பிரிவில் காணப்படுகிற நிபந்தனைகளைவற்றையும் பூர்த்தி செய்த காரணத்தால் 1-ம் பிரதிவாதியின் மீது தவறுதல் குற்றம் சாட்டலாமென்று பொதுவான அபிப்பிராயங் கொடுக்கப்படுகிறதாக இந்தக் கேஸின் தீர்மானத்தால் யூகிக்கத்தகாது. இத்தியாதி காரணங்களைச் சொல்லி வாதிக்குப் பின் தாவாவை உவித்டிரா செய்துகொண்டு மறுதாவா முறைப்படி நடத்த ஏதுகரமிருந்தால் 1-ம் பிரதிவாதியின் செலவுகள் முழுவதையும் கொடுத்து விட்டு நடத்தலாமென்று அனுமதி அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. (36. M. L. J. 286.)

ஜஸ்டிஸ் அப்துல்ரஹீம் & ஒல்ட் வீல்டு-J.

(மதுரை ஜில்லா)

A, S, 409 of 1917 - 27, நவம்பர் 1918.

வெங்கடாசலபதி அய்யர் vs தவசி சேர்வை.

மதுரை சப்கோர்ட்டார் அடமான வியாஜ்ஜியத்தில் அளித்த பிரதம டிக்கிரீயில் குறித்த வாய்தாவுக்குள் டிக்கிரீயில் தீர்மானிக்கப்பட்ட அசல் வட்டி செலவுத்துகை ஆகிய மூன்று அயிடங்களையும் சேர்த்து செலுத்தத் தவறினதற்காக அடமான சொத்தை லலம்போட்டு வசூலாகும் துகையிலிருந்து பிரதம டிக்கிரீயின் கெடு வாய்தாவில் நிர்ணயிக்கப்படுகிற மூன்று அயிடங்களின் மொத்தத் துகையின்பேரில் பின் வட்டியையும் 100-க்கு 6-விகிதம் கணக்கிட்டு டிக்கிரீதாரனுக்குச் செலுத்தவேண்டியது நியாயமாகுமென்றும் வட்டி விகிதத்தை 100-க்கு 6-என்று சாதாரணமாய் வழக்க முறையாக உத்தரவளிக்கத் தகுமென்ருலும் அது விஷயமாய்க் கோர்ட்டாருடைய யுக்தானுஸாரத்தைப் பிரயோகப்படுத்தி பிரதம டிக்கிரீயின கெடுவுக்குப் பிந்திய காலத்திற்கு மொத்த பாக்கியின்பேரில் வட்டிக்குஉத்தரவளிக்கலாமென்ற தீர்மான அபிப்பிராயம் இந்தக் கேஸில் கொடுக்கப்பட்டதும் தவிர,

வாதி வாங்கியிருந்த தாவா அடமான தஸ்தவேஜில் கண்டபடி குறித்த வாய்தாவில் துகையை வாபிஸ் செய்தால் முக்கால் வட்டியென்றும் தவறினல் ஒரு வட்டி யென்றும் செலுத்தக்கடவதாயினும் மதுரை சப்கோர்ட்டார் தவறுதலுக்காக விதிக்கப்படுகிற வட்டியானது அபராத ஜினாஸாக மதிக்கப்படவேண்டுமென்றும் அது கண்டிராக்டு விகிதமாக மதிக்கப்படாதென்றும் சொல்லி முக்கால் வட்டிக்குப் பிரதம டிக்கிரீ யளித்திருக்கிற நியாயத்தை ஹைகோர்ட்டார் ஒப்புக்கொள்ளாமல் பிரதிவாதி ஒரு வட்டிக்கு வாங்கி யிருந்த கடனைத் தீர்ப்பதற்காக தாவா அடமானக் கடன்துகையைப் பிரயோகப்படுத்தி யிருப்பதால் கெடுவுக்குள் துகை செலுத்தாத பட்சத்தில் ஒரு வட்டி விகிதம் வசூலிக்க ஷரத்து ஏற்படுத்தினது அநீதியல்லவென்று சொல்லி ஒரு வட்டிக்கு டிக்கிரீயளித்து பிரதம டிக்கிரீயில் கண்ட வாய்தாவுக்குப் பின் டிக்கிரீ பாக்கியாக நிர்ணயிக்கப்பட்ட மொத்தத் துகையின்பேரில் 100-க்கு 6-விகிதமாக வட்டி சேர்த்து லலத்துகையிலிருந்து வஜா செய்யவேண்டியதென்றும் தீர்ப்பளித்தார்கள்.

அபராத வட்டி யென்ற ஆட்சேபனைக்கு ஒரே சமாதானம் சொல்லி சப்கோர்ட் உத்தரவை மாற்றி விட்டார்கள் அதாவது அடமான கடன் துகையைக்கொண்டு ஒரு வட்டிக்கு வாங்கியிருந்தமுன் கடனைத் தீர்க்கப்பட்ட சந்தர்ப்பத்தையிட்டு அவ்வித அபிப்பிராயங் கொடுத்திருக்கிருர்கள்,

இரண்டாவது பாயிண்டைப்பற்றி யளித்த தீர்மானத்திற்குக் காரணமாக:—ஸி. பி. ஸி. ஆர்டர் 34 ரூல் 4-ன் வசனங்களை ரூல் - 2 - ன் வசனங்களுடன் சேர்த்துப் படிக்கும்பொழுது லலத்துகையிலிருந்து பிரதம டிக்கிரீயில் குறித்த வாய்தா தேதி முதல் அசல் வட்டி செலவுதுகையென்ற மொத்த பாக்கியையும் பிந்திய வட்டியுடனும் பிந்திய செலவுத்துகையையும் சேர்த்துக்கொடுக்கவேண்டியதென்று சட்டக் கருத்தில் ஏற்படுகிறதாகச் சொல்லவேண்டும். பிந்திய வட்டி என்பது மொத்த பாக்கித் துகையின் பேரில் கவனிக்கப்படவேண்டிய கருத்து மேற்கூறிய ரூல்களின் வசனங்களால் அனுமானிக்கப்படலாம், பிரதம டிக்கிரீ ஏற்பட்ட உடன் வாதிக்கு அடமான தஸ்தவேஜின் நிபந்தனைகள் டிக்கிரீயாக மாற்றப்பட்டு டிக்கிரீ பாக்கித் துகைக்கு பாத்தியஸ்தனுகிரு னென்றும் அடமான தஸ்தவேஜில் கண்ட அசல் துகைக்கு மட்டும் வட்டி செலுத்தக் கடவதென்ற ஆர்கியுமெண்டு ஒப்புக்கொள்ளத் தகாதென்றும் புது ஸி. பி. ஸி நமோதுக்கு வருமுன் பிரிவி கௌன்ஸிலார் 34 கல்கத்தா 150-ல் விளம்பியிருக்கிருர்கள், 21 மதராஸ் 364-யும் பார்க்கவும். 19 அலகபாத் 174-ன் நியாயத்தை பிரிவி கௌன்ஸிலார் ஒப்புக்கொள்ளவில்லை.

பிந்திய வட்டி விகிதத்தைப்பற்றி யோசிக்குமிடத்து வெளி ஜில்லாக்களில் ஒரேவிதமான வட்டி விகிதம் அளிக்கப்பட்டு வருவதாய்க் காணப்படவில்லை ஹைகோர்ட்டார் அப்பீல் தாப்பில் டிக்கிரீயளிக்கும்பொழுது மொத்த

பாக்கித் தொகைக்கு 100-க்கு 6-வட்டியை சேர்க்கிறார்கள். மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் ஏற்படும் டிக்கிரீயில் எலத்திற்கு உத்தரவளிக்கும்பொழுது கோர்ட்டாரால் நிர்ணயிக்கப்படுகிறபின் வட்டியுடன் செலுத்தவேண்டியதென்று காணப்படுகிறது. எலம் உறுதியாகிற காலத்தில் பிந்திய வட்டி விண்ணப்பம் செய்து கொள்ளப்படுகிறது. அப்பொழுது கோர்ட்டார் யுக்தானுஸாரப்படி வட்டி உத்தரவளித்திருக்கிறார்கள். இதனால் சாதாரணமாய் பிந்திய வட்டி விகிதம் 100-க்கு 6-என்ற கோர்ட் வட்டியாக விதிக்கப்படவேண்டுமென்றும் இது விஷயமாய்க் கோர்ட்டாருடைய யுக்தானுஸாரமும் உண்டென்றும் அபிப்பிராயங் கொடுக்கலாம். இந்தக் கேஸில் பிரதம டிக்கிரீயில் கண்ட வாய்தாவுக்குப் பிறகு பிந்திய வட்டிக்காக உத்தரவளிக்கத் தகாத காரணம் ஒன்றும் காணப்படவில்லை, ஆகையால் 100-க்கு 6-விகிதம் பிரதம டிக்கிரீயின் கெடுவாய்தாவில் ஏற்படும் மொத்த பாக்கியின் பேரில் செலுத்தப்படவேண்டியதென்று சொல்லப்பட்டது (36 M. L. J - 288)

—o—

சீவ் ஜஸ்டிஸ் & சேஷகிரி அய்யர்-J.

(கோயமுத்தூர் ஜில்லா)

L. P. A 70 of 1918 - 20 ஜனவரி 1919.

சின்ன வெங்கடசாமி நாயகன்

vs

வெங்கடஸாமி நாயகன்

சப்கோர்ட்டில் அடமான கடன் பாக்கிக்காக செய்த தாவாவில் சில சாட்சிகளின் விசாரணையான பிறகு இருதரத்தாரும் விவாதத்தைத் தீர்மானிப்பதற்காக சப் ஜட்ஜியவர்கள் உள்பட மூன்று மத்தியஸ்தர்களை நியமனம் செய்து அம்மூவர்களில் மெஜாரிடியார் கொடுக்கிற பைசல் தீர்மான அபிப்பிராயத்திற்கு இருதரத்தாரும் கட்டுப்படுவதாக ஒப்புக்கொண்டபடி வாதிக்கனுகூலமாய் ஏற்பட்ட மெஜாரிடியின் அவார்டு ரிகார்டில் தாகல் செய்யப்பட்டது. அதன்மேல் பிரதிவாதி சப்கோர்ட்டிலேயே விண்ணப்பங் கொடுத்துஷை அவார்டை ரத்து செய்யவேண்டும் என்று பற்பல காரணங்களைச் சொல்லி வேண்டிக்கொண்டார். சப்கோர்ட்டார் பிரதிவாதியின் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் தாகலான ரிவிஷன் விண்ணப்பத்தையும் ஹானரபில் ஜஸ்டிஸ் எய்லிங் துரையவர்கள் தள்ளுபடி செய்துவிட்டமையால் ஒரு ஜட்ஜியவர்களின் உத்தரவின் பேரில் இந்த லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் தாகல் செய்யப்பட்டு மேற்கூறிய இரண்டு ஜட்ஜிமார்களும் ஒரே அபிப்பிராயமாக அவார்டை ரத்து செய்யத் தகாதென்று தீர்மானித்து லட்டர்ஸ்பேடெண்டு அப்பீலை டிஸ்மிஸ் செய்துவிட்டார்கள். ஹைகோர்ட் தீர்ப்பின் காரணச் சுருக்கமாவது:—

சப்கோர்ட்டார் தங்கள் முன் விஜாரணைக்கு வந்திருக்கும் வழக்கைத் தீர்மானிப்பதற்கு ஏற்படும் ப்ரைவேட்டான மத்தியஸ்தர்களில் ஒருவராக நின்று அவர்களுடன் தாங்கள் கலந்துகொள்ளுவது விரும்பத்தக்கமுறையல்லவென்று பிரதம மத்தியில் சொல்லத் தகும்.

ஆனால் சப்கோர்ட்டார் ஸி. பி. ஸி. 2-வது ஷெடியூலில் விதிக்கப்பட்டிருக்கிற முறையை அனுஸரித்து இந்தக் கேஸில் மத்தியஸ்த நியமன நடவடிக்கைக்கு அனுமதி கொடுத்திருக்கிறார்கள். 2-வது ஷெடியூலின் முறையை அனுஷ்டித்தால் மத்தியஸ்தரான சப் ஜட்ஜியவர்களுடைய நடத்தையைப்பற்றியும் நல்லெண்ணக் குறைவைப்பற்றியும் ஆட்சேபனை செய்யத்தகும். ஜட்ஜியவர்கள் இவ்விதமான புகாருக்குப் பாத்திராகிற நிலைமையை தரிக்கக்கூடாதென்று சொல்லவேண்டும். தவிர 2-வது ஷெடியூல் முறையில் அவார்டுக்காக ஏற்படும் வாய்தாவை அதிகரிக்கவும், அவார்டை மறு ஆலோசனைக்காகத் திருப்பவும் அல்லது அவார்டு கொடுத்த மத்தியஸ்தர்கள் பாரபட்சமாயிருந்ததாகச் சொல்லி அவார்டை ரத்து செய்யவேணுமாயும் பார்ட்டிகள் சப்கோர்ட்டாருக்கு விண்ணப்பம் கொடுக்கத்தகும். இவ்விதமான விண்ணப்பங்களை மத்தியஸ்தர்களில் ஒருவராகிய சப்ஜட்ஜியவர்கள் ஏற்றுக்கொள்ளவும் உத்தரவளிக்கவும் தகாது. கோர்ட்டார் ஒரு நிலைமையில் அளித்த உத்தரவைப்பற்றி வேறொரு நிலைமையில் மறு ஆலோசனை செய்யத் தகாது. ஸிவில் கோர்ட்

ஆக்டு 17-வது பிரிவின் கருத்தில் மேல்கண்ட நியாயம் விளம்பியிருக்கிறது. ஆகவே இவ்வித மான அசந்தர்ப்பங்களை கவனித்தால் ஸி,பி.ஸி 2-வது ஷெடியூலின் முறையை ஜட்ஜியவர்களும் ஒருவராக மத்தியஸ்த நியமனம் செய்தது அனுசிதமென்று ஆட்சேபிக்கத் தகும். பிரதிவாதிக்காக ம-ா-ா-ஸ்ரீ டீ. ஆர் ராமச்சந்திரய்யரவர்கள் சொல்லுகிறபடி மத்தியஸ்த நியமனம் உத்தரவின் வாசகமானது 2-வது ஷெடியூலின் முறையில் விதிக்கப்பட்ட வண்ணமாக இருந்தாலும் பார்ட்டிகளின் கருத்தை உத்தேசித்து அவார்டின் முறையைப்பற்றி நிர்ணயிக்கவேண்டும். இந்தக் கேஸில் இருதாத்தாரும் சம்மதமாகத் தங்கள் விவாதமான பாயிண்டைப்பற்றி குறித்த மூவர்களின் தீர்மானத்திற்குக் கட்டுப்படுவதாய் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய தீர்மானம் தங்கள் வழக்கின் முடிவென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். இவ்வித தீர்மான முறை ஸி. பி. ஸி 2-வது ஷெடியூலின் விதி முறைகளில் அடங்கியிருப்பதாய்ச் சொல்லத் தகாது. கக்ஷிக்காரர்கள் தங்கள் வியவகாரத்தை ஜட்ஜியவர்களுக்கும் மற்ற இருவருக்கும் ஒப்புவித்து அவர்களின் தீர்மானத்திற்குச் சம்மதிப்பதாய் ஒப்புக்கொண்ட பிறகு அம்மூவரும் அளித்த தீர்மானம் முடிவான பைசலாகும். சட்ட முறைப்படி ஏற்படும் ஜட்ஜ்மெண்டுகளுக்கொப்பாக மேல் நடவடிக்கை நடத்த வழி ஏற்படாதென்று சொல்லவேண்டும் 1896 A C 136 - ஐ பார்க்கவும்.

ஸி. பி. ஸி 89-வது பிரிவின்படி ஒரு தாவாவில் அல்லது மற்றொரு நடவடிக்கையில் தீர்மானிக்கப்படவேண்டிய பாயிண்டானது மத்தியஸ்தர்களுக்கு ஒப்பிவிக்கப்பட்டால் மத்தியஸ்தர்களின் அவார்டும் அதைப்பற்றிய நடவடிக்கைகளும் ஸி. பி. ஸி - யின் 2-வது ஷெடியூல் முறையை அனுஷ்டிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறபடியால் இந்தக் கேஸில் ஏற்பட்ட அவார்டையும் ஆட்சேபிக்கலாமென்று வாதிக்கப்படுகிறது. 89-வது பிரிவின் அம்சத்திற்கு விலக்கமாக இந்தியன் ஆர்பிட்ரேஷன் ஆக்டு அல்லது நமோதிலும் வேறு எவ்விதமான சட்ட முறையை அனுஸரித்து யாதொரு வழக்கு மத்தியஸ்தர்களுக்கு ரிபர் செய்யப்பட்டால் அந்த நடவடிக்கைகள் ஸி பி ஸி, 2-வது ஷெடியூலின் முறைகளை அனுஸரிக்கத் தேவையில்லையென்று விளம்பியிருக்கிறது,

ஸி பி, ஸி. ஆர்டர் 23-ன் கீழாக இந்தக் கேஸில் மத்தியஸ்தர்களின் தீர்மானத்திற்கு ரிபர் செய்த உத்தரவை மதிக்கலாமாகையால் அதாவது வியவகாரத்தை கோர்ட்டார் சட்டப்படி மேல் நடத்தவேண்டியதில்லையென்று உவித்டிரா செய்துகொள்ளும் முறை வியவகாரம் மத்தியஸ்தர்கள் சொல்லுகிறபடி பைசலாகவேண்டியதென்று ஒப்புக்கொண்டு வழக்கை மேல் நடத்தாமல் தீர்த்துக்கொள்ளும் முறை ஆகிய இவ்வகையான நடவடிக்கைகளிலடங்கியதாக மத்தியஸ்த நியமன ஏற்பாட்டை மதிக்கலாமாதலால் அதற்கு 2-வது ஷெடியூலின் முறையைப் பிரயோகப்படுத்தக்கூடாதென்று சொல்லவேண்டும்; மத்தியஸ்தர்கள் சொன்னபடி தங்கள் வழக்கு தீர்ந்துபோய்விட்டதாகக் கோர்ட்டில் ரிபோர்ட் செய்த வண்ணமாய் இந்தக் கேஸின் அவார்டை மதிக்கவேண்டும். அந்த ரிபோர்ட்டின் பிரகாரம் கோர்ட்டார் டிக்கிரீயளித்ததாக நிதானிக்கவேண்டும். அவ்வித டிக்கிரீயானது மாறுதலுக்கிடமில்லாத பைசல் தீர்மானமாகும். 26-பம்பாய் 76 - ஐப் பார்க்கவும். ஆர்டர் 36-ஐ அனுஸரித்துக் கோர்ட்டாருக்கு யாதொரு பாயிண்டை நிர்ணயிக்கும்படி குறித்துச்சொல்லி வேண்டிக்கொண்டபின் கொடுக்கப்படுகிற அபிப்பிராயத்திற்கு அப்பீல் கிடையாது. 26-பம்பாய் 78-ஐப் பார்க்கவும், அதுபோலவே மூவருடைய தீர்மானத்துற்கு ஒப்புக்கொண்ட பார்ட்டிகள் அவர்களுடைய தீர்மானத்தை ஆட்சேபிக்கத் தகாது. அவர்களுடைய அவார்டை அனுஸரித்து ஏற்பட்ட டிக்கிரீ முடிவான டிக்கிரீ வழக்கைப் புனர் விசாரணை செய்ய இடங்கொடுக்கத் தகாது. சப்கோர்ட்டார் 2-வது ஷெடியூலின் முறையை அனுஸரித்து மத்தியர்களுக்கு ரிபர் செய்தது பிசகென்றாலும் மேற்கூறிய நியாயங்களைச் சொல்லி சப்கோர்ட்டார் பிரதிவாதியின் விண்ணப்பத்தைத் தள்ளும்படி செய்தது நியாயமென்று ஹானரபில ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள் உத்தரவளித்தார்கள்,

அதற்கு ஒற்றுமையான அபிப்பிராயங் கொடுத்த ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் இந்தக் கேஸின் சந்தர்ப்பத்தில் ஏற்பட்ட டிக்கி

ரீயை சம்மதி டிக்கிரீயென்றும் அதற்கு ஆட்சேபனை முறைகளே கிடையாதென்றும் சொன்னார்கள். 36, M. L. J. 291.

—o—

புல்பெஞ்சு கேஸ்.

ஜஸ்டிஸ் அப்துல் ரஹீம், ஓல்ட் வீல்டு
& கவுட்ஸ்டிராட்டர்-J. J.

(மதுரை ஜில்லா)

L. P. A 186 of 1917 - 30 ஸெப்டம்பர் 1918

கந்தசாமி பிள்ளை vs ராமஸாமி மன்னாடி.

1-ம் பிரதிவாதியாகிய ராமஸாமி மன்னாடியார் வாதிகளுக்கு சில சாப்பித்தோட்ட நிலங்களை 17-வருஷத்திற்கு ரெஜிஸ்டர் தஸ்தவேஜினால் குத்தகைக்கு ஒப்படைத்து விட்டமையால் ஷை நிலங்களை வாதிகள் உடனே வசப்படுத்திக் கொண்டு அனுபவித்து வரவேண்டியதாயும் குத்தகைத் தொகையிலிருந்து வாதிகள் ஷை நிலங்களின்பேரில் ஏற்பட்டிருந்த பந்தகக் கடன் பாபத்தையும் மற்றும் சில கடன் பாக்கிகளையும் செலுத்திவிடவேண்டியதாகவும் ஷை தஸ்தவேஜின் ஷரத்துப்படி ஒப்புக்கொண்டும் பந்தகக் கடன் தொகையைச் செலுத்தாத காரணத்தால் பந்தகம் பெற்றவர் தன் பாக்கித் தொகைக்காக தாவா செய்து டிக்கிரீயும் பெற்றார் ஷை தாவா பெண்டிங்கிலிருந்தபொழுதே 1-ம் பிரதிவாதி தாவா சொத்துகள் யாவற்றையும் 4-7-ம் பிரதிவாதிகளுக்கு ஒத்திவைத்து வாங்கிய தொகையைக்கொண்டு பந்தக டிக்கிரீ பாக்கியைத் தீர்த்து விட்டார்.

அதன்பேரில் வாதிகள் ஒத்திதார்களுடைய சுவாதீன அனுபோகத்திற்குச் சென்ற குத்தகை நிலங்களை தங்கள் வசப்படுத்திக்கொடுக்கவேணுமாய் 1-ம் பிரதிவாதியையும் ஒத்திதார்களையும் எதிரிகளாய் சேர்த்து தாவா செயதார்கள். சப் கோர்ட்டார் குத்தகை தஸ்தாவேஜில் கண்ட பிரகாரம் பந்தகக் கடன் தொகையை வாதி செலுத்தாத காரணத்தால் குத்தகை நிலத்தோட்ட நிலங்களை அடைய லாயக்குள்ளவர்களல்லவெனத் தீர்மானித்து வாதிகளின் பிராதைத் தள்ளுபடி செய்து விட்டார்கள்.

ஹைகோர்ட்டில் அப்பீலை ஈரங்கி கேட்ட ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்களும் ஹானரபில் ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகளும் வித்தியாஸமான தீர்மானங் கொடுத்தார்கள். சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் குத்தகைக் கொப்படைக்கப்பட்ட சொத்தை வாதிகள் சுவாதீனமடையத் தகுமென்று சொல்லி ஒத்திக்கடன் தொகையை 4-7-ம் பிரதிவாதிகளுக்குச் செலுத்திவிட்டு சொத்துக்களை சுவாதீனமடையலாமென்று டிக்கிரீயளித்தார்கள். ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகளோ வாதிகள் ஒப்புக்கொண்ட பிரகாரம் பந்தகத் தொகையைச் செலுத்தத் தவறினபடியால் குத்தகை தஸ்தவேஜின் ஏற்பாடு நிஷ்பிரயோஜனமாச்சுதென்று சொல்லி சப்கோர்ட்டாருடைய தீர்மானத்தைக் காயப்படுத்தினார்கள். ரூல்படிக்கு வாதியின் அப்பீல் தள்ளுபடியானதாகையால் வித்தியாஸமான அபிப்பிராயத்தையிட்டு லட்டர்ஸ்பேடெண்டு அப்பீல் செய்ய லாயக்குள்ளவர்களாய் புல்பெஞ்சியாரின் முன் வாதிகள் தங்கள் நியாயத்தை ஆர்கியுமெண்டு செய்ததில் மூன்று ஜட்ஜிமார்களும் ஒரே அபிப்பிராயமாய் ஹானரபில் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் கொடுத்த அபிப்பிராயம் சரியானதென்று ஒப்புக்கொண்டு அதாவது ரெஜிஸ்டரான குத்தகை தஸ்தவேஜில் கண்ட சொத்துக்களை வாதிகள் வசப்படுத்திக்கொள்ள லாயக்குண்டென்று அபிப்பிராயப்பட்டு ஒத்தித்தொகையைச் செலுத்தின பிறகு வாதிகள் சுவாதீனமடையவேண்டியதென்ற டிக்கிரீயின் ஷரத்துக்களைப்பற்றி வாதிகள் லட்டர்ஸ்பேடெண்டு அப்பீலில் ஆட்சேபிக்காதபடியால் அந்தவிதமான நிபந்தனையுடன் வாதிக்கனுகூலமாக சுவாதீன டிக்கிரீயளித்தார்கள். ஜஸ்டிஸ் அப்துல் ரஹீம் அவர்கள் கொடுத்த தீர்மான அபிப்பிராயத்தின் காரணச் சுருக்கமாவது:—

பிரதிவாதிகளுக்காக வக்கீல் மிஸ்டர் K. ராஜா அய்யரவர்கள் தாவா (lease) என்னும் குத்தகை தஸ்தவேஜை ஒரு காண்டிராக்டு என்னும் உடன்படிக்கைப் பத்திரமாக மதிக்கவேணுமென்றும் பின்னால் ஏற்படக்கூடிய மாசூலின் அனுபோகத்தைப்பற்றிய உடன்படிக்கைப் பத்திரமாகுமென்றும் வாதிக்கிறார். இந்த வாதம் இதுவரையில் சொல்லப்படவுமில்லை. எதிரான் ஸர்ஸ்டேட்மெண்டில் தாவா தஸ்தவேஜைக் குத்

தகைப்பத்திரமென்று ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். காப்பித்தோட்டம் வாழைத்தோட்டம் இதுகளுடைய மாகூலைப்பற்றிய உடன்படிக்கை ஏற்பாடாகச் சொல்லத் தகுமானாலும் தோட்ட நிலங்களை வாதிகளின் இஷ்டப்பிரகாரம் அனுபவிக்கும்படி தஸ்தவேஜில் அனுமதி கொடுத்திருப்பதையும் பத்திரம் ஏற்பட்ட தினத்திலிருந்து 17-வருஷ காலம் வாதிகள் அனுபவித்து வந்து வாய்தா முடிந்த உடன் நிலங்களை 1-ம் பிரதிவாதிக்கு மறு சுவாதீனப்படுத்திக் கொடுக்கவேண்டியதென்றும் சர்க்கார் கிஸ்தியை 1-ம் பிரதிவாதி செலுத்தி வரவேண்டியதென்றும் கண்டிருப்பதால் குத்தகை தஸ்தவேஜினால் நிலத்தை சுவாதீனப்படுத்திக்கொடுக்கிற அம்சங்களெல்லாம் அமைந்திருக்கிறது. ஆகவே பரஸ்பரமாக யாதொரு காரியத்தை முடித்துக்கொடுத்துப் பூர்த்திசெய்யவேண்டிய உடன்படிக்கையாக மதிக்கத்தகாதென்று சொல்லவேண்டும். பிந்திய மாகூல் விஷயமாய் ஏற்பட்ட ஒப்பந்தமானால் வாய்தா முடிந்தபின் நிலங்களைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியதென்ற ஷாத்து அனுவசியமாகுமே. ஆகையால் வாதிகள் குத்தகைப் பணத்தைச் செலுத்தாதபோதிலும் குத்தகை சொத்தை சுவாதீனபபடுத்திக் கொள்ளத் தகுமென்று சொல்லவேண்டும்.

ப்ராபர்டி ஆக்டு 108-வது பிரிவில் (lease) குத்தகைதாரனுக்கு சொத்தை வசப்படுத்திக் கொடுக்கவேண்டிய கடமையும் குத்தகைதாரன் துகையைக் குறித்த காலத்திலும் இடத்திலும் செலுத்தவேண்டிய கடமையும் (b) - (e) என்ற உட்பிரிவுகளாய் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால் ஒரு கடமைக்கு மற்றொன்று ஜவாப்பாக பூர்த்தியாகியிருக்கவேண்டுமென்று வாதிக்கப்படுகிறது.

(Lease) குத்தகை பாத்தியம் என்ற பதமானது ப்ராபர்டி ஆக்டு 105-வது பிரிவில் வியாக்கியானப்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது யாதொரு சொத்தை அனுபவிக்கும்பொருட்டு வசப்படுத்திக்கொடுத்தல் என்று சொல்லப்பட்டிருக்கிறது, நிலச் சாகுபடிக்காக ஏற்படும் குத்தகை ஏற்பாடுகளுக்கு ப்ராபர்டி ஆக்டின் முறைகள் ஏற்காதபோதிலும் மேற்கூறிய வியாக்கியானம் நிலச் சாகுபடிக் குத்தகைக்கும் பொருத்தமாகும். பிரதிவாதிகளின் வக்கீல்கள் அதைப்பற்றி ஆட்சேபிக்கவுமில்லை. ஆகவே தாவா குத்தகை ஏற்பாட்டினால் நிலச் சுவாதீன மளிக்க வேண்டிய கடமை ஏற்படுகிறது. குத்தகை தஸ்தவேஜின் வசனங்களால் எதிர் நடையாக அதாவது துகையைச் செலுத்தினபிறகு சொத்தை வசப்படுத்திக்கொடுக்கவேண்டிய கடமை ஸ்பஷ்டமாய் குறிக்கப்பட்டாலொழிய குத்தகைக்குஒப்படைக்கின்றஏற்பாட்டினால்சொத்தை வசப்படுத்திக்கொடுக்கவேண்டிய கடமை நிராட்சேபணையாக பூர்த்தி செய்யப்படவேண்டும். தாவா தஸ்தவேஜில் எதிர் நடையான கடமை யாதொன்றும் குறிக்கப்படவில்லையென்று இரண்டு கோர்ட்டாரும் விளம்பியிருக்கிறார்கள்.

கிரயத் துகையைச் செலுத்தத் தவறின காரணத்தால் கிரயமான சொத்தின் சுவாதீனத்தை கைவிட நியாயமில்லையென்று சொல்லத் தகாது. கிரய சொத்தை வசப்படுத்திக்கொடுக்கவேண்டிய கடமை கிரய தஸ்தவேஜானது பூர்த்தியான உடன் ஏற்பட்டு விடுகிறது. கிரயத்துகைக்காக தனிமையான பரிகாரம்தேடவேண்டுமேயொழிய துகை செலுத்துமட்டும் சொத்தைக் கொடுக்காமல் நிறுத்திவைக்கத் தகாது. 34 M 543, 30 M 524, 16 M L. J. 524 இவைகளைப் பார்க்கவும், ஆனால் கிரய சொத்தின் சுவாதீன முறைக்கும் குத்தகைக் கொப்படைக்கும் சொத்தின் சுவாதீன முறைக்கும் வித்தியாஸமுண்டென்று வாதிக்கப்படுகிறது. குறித்த வாய்தாவுக்கு ஏற்படும் குத்தகை ஏற்பாடு ஒரு உடன்படிக்கையாக மதிக்கப்படவேண்டுமென்று சொல்லப்பட்டு இங்கிலீஷ் லா முறையானது எடுத்துக் காட்டப்படுகிறது. இந்தியாவில் குத்தகை பாத்தியதையின் பேரில் அனுபோகம் செய்கிற முறைக்கும் கிரயம் பெற்று ஸர்வ ஸ்வதந்தரத்துடன் அனுபவிக்கிற முறைக்கும் இங்கிலீஷ் லாவில் ஏற்பட்டிருக்கிற வித்தியாஸம் இந்தியாவில் பாராட்டப்படுவதாய் யாதொரு இந்தியன் அதாரிடிகளும் எடுத்துக் காட்டப்படவில்லை, அனுபோக முறைகளைப்பற்றிய இங்கிலீஷ் சட்டங்களை இந்தியாவில் பிரயோகிக்கத் தகாது.

மறுபடியும் தர்ம நியாயத்தைக் கவனித்து குத்தகைப் பணத்தை செலுத்தத் தவறின குத்தகைதாரனுக்குச் சொத்தை வசப்படுத்திக்

கொடுக்கத் தகாதென்று வாதிக்கப்படுகிறது. வாதிகள் கேட்கும் சுவாதீனப் பரிகாரமானது தர்ம நியாயத்தை அனுஸரித்த நியாயத்தைப்பற்றியதல்ல. குத்தகை தஸ்தவேஜினல் ஏற்பட்ட பாத்தியதையைக் கொண்டு (சட்ட முறைப்படி) சுவாதீனம் கேட்கிருர். அதுகாரணத்தால் காண்டிராக்டு ஆக்டு 39-வது பிரிவையும் பிரயோகிக்கத் தகாது.

ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்டு 35-வது பிரிவின் நியாயத்தைக் காட்டி மோச வார்த்தைகளால் ஏற்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றத் தகாதென்று சொல்லப்படுகிறது. ஆனல் இந்தக் கேஸில் வாதிக்கு சுவாதீன பாத்தியதையை குத்தகை தஸ்தவேஜினல் அளித்த பிறகு பிரதிவாதிகள் செய்த தப்பிதத்தால் குத்தகை பாத்தியதையை ரத்து செய்யத் தகாதென்று சொல்லவேண்டும்.

34 அலகபாத் 659-ல் அடமானம் பெற்றவன் அடமானத் தொகையில் ஒரு பாகத்தை மட்டும் செலுத்தி மிகுதியை செலுத்தாத காரணத்தால் சொத்துக்காரன் அடமான சொத்தை மற்றொருவனுக்கு விக்கிரயப்படுத்தினதின்பேரில் கிரயம் பெற்றவனுக்கு அடமானதாரன்பேரில் குறித்த 10-வருஷ கெடுவுக்கு முந்தியே சுவாதீனத்தைத் திருப்பிக் கொடுத்து விடும்படி டிக்கிரீயளிக்கப்பட்டிருக்கிறது. அடமானதாரன் செய்யவேண்டிய முக்கியமான கடமையைச் செலுத்தத் தவறினதற்காக தர்ம நியாய முறையை அனுஸரித்து மேற்கண்ட விதமான உத்தரவளித்திருக்கிருர்கள். யாதொரு அதாரிடியாகிலும் பொதுவான நீதி மூறைகளும் எடுத்துக் காட்டிய தீர்மான அபிப்பிராயமல்ல. சட்ட நியாயப்படி கிடைத்த குத்தகை பாத்தியதையைக்கொண்டாட விரும்புகிற வாதிகளின் பரிகாரத்திற்கு மேற்கூறிய அலகபாத் கேஸின் நியாயம் பாதகமாய்ப் பிரயோசப்படுத்தப்படக்கூடாது, 18-மதராஸ் 126-ன் தீர்மான நியாயம் இந்தக் கேஸுக்கு விருத்தமாகாது. அந்தக் கேஸின் வியவகாரங்கள் பூராவாக ரிபோர்ட்டில் காணப்படவில்லை.

ஆகவே மேற்கூறிய காரணங்களால் சீவ் ஜஸ்டிஸ் அவர்கள் அபிப்பிராயப்பட்டபடி வாதி குத்தகை சொத்தின் சுவாதீன பாத்தியதை குத்தகை தஸ்தவேஜினல் ஏற்பட்டுவிடுகிறதென்றும் ஒத்திதார்களுக்கு வாதிகள் தொகையைச் செலுத்தின பிறகு சுவாதீனம் பெறவேண்டியதென்ற உத்தரவைப்பற்றி பிரதிவாதிகள் ஆட்சேபனை செய்யாதபடியால் அவ்வித நிபந்தனையுடன் வாதிகளுக்கு சுவாதீன டிக்கிரீ யளித்தார்கள். 36-M L. J. 313.

—o—

புல்பெஞ்சு கேஸ்.

சீவ் ஜஸ்டிஸ், சதாசிவய்யர் & ஸ்பென்ஸர்-J.J.

(நெல்லூர் ஜில்லா)

S. A. 1601 of 1916-14 மார்ச்சு 1918.

ஸாமந்தலகோடி ரெட்டி vs போதுரி சுப்பய்யா.

ஒரு ஸர்க்கார் உத்தியோகஸ்தன் உத்தியோக தோரணையில் நடத்தும் நடவடிக்கையில் மாச்சரியமான கருத்துடன் எதிராளிக்கு சம்பவிக்காத தீங்கை விளைவித்த காரணத்தால் அவர் மீது நஷ்டப்பரிகாரத்திற்கு தாவா செய்யவேணுமானல் ஸி.பி.ஸி. 80-வது பிரிவின்படி முன்னல் நோட்டீஸ் கொடுத்திருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

வாதிகள் அடமானக் கடன் பாக்கி வசூலிக்கும் பொருட்டு தாவா செய்து டிக்கிரீயாகுமுன் எதிரிக்குரிய சில ஜங்கம சொத்துக்களை உடன் ஜப்தி செய்யும்படி உத்தரவு பெற்ருர். இதற்கிடையில் கிராம முன்ஸீப்தார் எதிரியால் ஏற்பட்ட ரெவினியூ பாக்கியை வசூலிப்பதற்காக ஷை யாருடைய சொத்துக்கள் யாவற்றையும் ஜப்தி செய்து ரெவினியூ தாப்பில் ஏலம்போட்டு வசூலான தொகையிலிருந்து ஸர்க்கார் தீர்வை பாக்கி போக மிகுதியை எதிரியின் வசம் செலுத்திவிட்டார். இந்த நடத்தையால் வாதிக்கு எதிரியின் ஜப்தியான சொத்துக்களைப்பற்றித் தொடர்ந்து செல்ல ஏதுகாமில்லாமற் போச்சுது. ஆகவே டி மூ கோர்ட்டாரால் ஏற்பட்ட உடன் ஜப்தி உத்தரவின் தகவல் தெரிந்தே கி-மு.வானவர் எதிரியுடன் கலந்துகொண்டு வாதியின் கடனை மோசம் செய்யும்பொருட்டு ரெவினியூ பாக்கிக்காக அனுவசியமாக பூரா சொத்தையும்

ஜப்தி செய்து எலம்போட்டு மிகுதித் துகையை எதிரியின் கையில் ரொக்கமாய்க் கொடுத்துவிட்டாரென்றும் இதனால் வாதிக்கு நேர்ந்த நஷ்டத்தைக் கி-மு வானவர் கட்டித்தரவேண்டுமென்று சொல்லி ஷெயாரின்பேரில் தாவா செய்ததில் ஸி. பி. ஸி. 80-வது பிரிவின்படி கி-மு வானவர் சர்க்கார் உத்தியோக முறையில் நடத்தின எல நடவடிக்கையைப்பற்றி புகார் சொல்லி அவர் மீது வழக்காடவேண்டுமானால் அவருக்கு முதலில் நோடீஸ் கொடுத்து சமாதானம் கேட்கவேண்டியது அவசியமான முறையென்றும் அப்படிப்பட்ட நோட்டீஸ் கொடுக்காமல் செய்யப்பட்ட இந்த தாவா ஏற்றுக்கொள்ளத் தகாதென்றும் ஆட்சேபிக்கப்பட்டது.

ஸிவில் கோர்ட் ஜப்தி கட்டளையின் தகவல் கி-மு-வுக்குத் தெரியாதென்று டி-மு கோர்ட்டார் அபிப்பிராயப்பட்ட போதிலும் அப்பீலில் சப்கோர்ட்டார் கி-மு அவ்விஷயம் தெரிந்தே மோசக்கருத்துடன் மிகுதித் துகையை எதிரிக்குக் கொடுத்துவிட்டதாகவே அபிப்பிராயப் பட்டார்கள். தவிர இவ்வித மோசமான நடத்தையால் ஸி. பி. ஸி. 80-வது பிரிவின் சிலாக்கியத்தை இழந்துவிட்டதாகவும் ஆகவே முன் நோடீஸ் கொடுக்கத் தேவையில்லையென்றும் சப்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார். ஹைகோர்ட்டில் 2-வது அப்பீலை ஈரங்கி கேட்ட ஹானரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யாவர்களும்ஜஸ்டிஸ் நேபியர் துரையவர்களும் பற்பல அதாரிடிகளையும் நியாயங்களையும் யோஜித்துப்பார்த்து ஸி பி.ஸி. 80-வது பிரிவின் அம்சத்தை கெட்ட எண்ணத்துடன் தீதான கருத்துடன் ஸர்க்கார் அதிகாரி உத்தியோக தோரணையில் நடந்துகொண்ட விஷயத்திலும் பிரயோகிக்கத் தகுமா அதாவது தாவாவுக்குமுன் நோடீஸ அனுப்பிவைக்கவேண்டிய தவசியமா வென்ற பாயிண்டைப்பற்றித் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கும்படி புல்பெஞ்சுக்கு ரிபர் செய்தார்கள். புல்பெஞ்சார் நோடீஸ் அவசியமென்றே அபிப்பிராயங் கொடுத்தார்கள்.

பிரதிவாதியாகிய கி-மு-வானவர் கெட்ட எண்ணத்துடன் உத்தியோக முறைமையைப் பிரயோகப்படுத்தினாரென்ற ருஜூ பாயிண்டைப் பற்றி ஹைகோர்ட்டார் சந்தேகிக்க இடமில்லாமல் அந்தவிதமாய்நடந்ததாகவே ஒப்புக்கொண்டு ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யாவர்களுடைய சந்தேகத்தை நிவர்த்தி செய்து இவ்விதமான சந்தர்ப்பத்திலும் நோடீஸ் அவசியமென்று அபிப்பிராயங் கொடுத்தார்கள்.

நல்லெண்ணத்துடன் நடந்துகொண்ட ஸர்க்கார் உத்தியோகஸ்தருடைய நடத்தையைப்பற்றி நஷ்டப்பரிகாரம் தேடினால் மட்டும் முன் நோடீஸ் அவசியமென்றும் கெட்ட எண்ணத்துடன் உத்தியோக அமுலை நடத்தினவனுக்கு முன் நோடீஸ் அவசியமில்லையென்றும் வித்தியாஸப்படுத்திச் சொன்ன ஆர்கியூமெண்டுகளுக்குச் சமாதானமாக நல்லெண்ணம் என்றும் கெட்டெண்ணமென்றும் கண்டறிந்த பிறகு நோடீஸ் கொடுக்கும் முறையின் அவசியத்தைப்பற்றி யோஜிக்கவேண்டிய கடமையும் யுக்தானுஸாரமும் தாவா செய்யக் கோரும் வாதியைச் சேர்ந்ததாகிறபடியால் அவ்விதமான சிலாக்கியத்தையும் பொருப்பையும் வாதிக்குக் கொடுப்பது உசிதமல்ல. ஆகையால் உத்தியோக தோரணையாக நடந்துகொண்ட நடத்தையால் ஏற்படும் நஷ்ட தாவாக்களுக்கு முன் நோடீஸ் கட்டாயம் கொடுக்கப்படவேண்டுமென்று சொல்லத் தகும். மேற்கண்டவிதமான வித்தியாஸம் காட்டுவது சரியல்ல. இதுவே புல்பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்கு முக்கியமான ஆதாரமாகச் சொல்லப்படவேண்டும். ஸர்க்கார் அதிகாரிகளின்பேரில் தாவா செய்யுமுன் நோடீஸ் சொடுக்கவேண்டிய காரணமென்னவெனில் அவர்கள் எச்சரிக்கையாகி திருப்திகரமான சமாதானவிடைகொடுத்து வீண் வியவகாரத்தைத் தடுக்கக்கூடும் அல்லது அஜாக்கிறதையால் ஏற்பட்ட நஷ்டத்தை வாதிக்குக்கட்டிக்கொடுத்து சுளுவில் பரிகார முறையை முடித்துக் கொடுக்கலாம். அல்லது நீதியாய் நடந்ததாக மேலதிகாரிகளுக்குத் தெரிவித்து வாதியின் வீண் வழக்கை எதிர்க்கிறதற்குவேண்டிய உதவியை ஸர்க்காரிலிருந்துஅடைய அபேட்சிக்கலாம். இவைகளுக்காக முன்னாடி தகவல் தெரிந்திருப்பது அவசியமாதலால் ஸி. பி. ஸி. 80-வது பிரிவில் தாவாவுக்கு இரண்டு மாதங்களுக்கு முன் நோடீஸ் கொடுத்திருக்கவேண்டுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது. நல்லெண்ணம் கெட்ட எண்ணம் என்பதைத் தீர்மானிப்பது யார், வாதி தன்னிஷ்டம் போல் கெட்ட எண்ணத்துடன் எதிரி அதிகாரஞ் செலுத்தின

தாகச் சொல்லி எதிரிக்கு நோடீஸின் சிலாக்கியங்களை மறுக்கலாமா? ஆகையால் தான் நல்லெண்ணமானாலும் கெட்ட எண்ணமானாலும் உத்தியோக தோரணையில் அதிகார அமுல் நடத்தினவனுக்கு முன் நோடீஸ் கொடுக்கவேண்டியது அவசியமென்றே புல்பெஞ்சார் அபிப்பிராயப்பட்டிருக்கிறார்கள். 34-M. L. J. 494.

—o—

சில தீர்ப்புச்சுருக்கங்கள்.

சீவ்ஜஸ்டிஸ், ஏய்லிங் &

குமாரஸாமி சாஸ்திரிகள் - J - J.

S. A 1822 of 1917-18 பிப்ரவரி 1919.

இரண்டு வீடுகளுக்கு மத்தியிலுள்ள காலிநிலத்தின் பாத்தியதையைப் பற்றிய விவாதம் ஸர்வே ஆபீஸருக்குரிபர் செய்யப்பட்டு அவரால் எல்லைக்கல் நட்டப்பட்ட பிறகு இருவரில் விரோதமடைந்த வீட்டுக்காரன் ஒருவருஷத்திற்குள் ஸிவில் வியாஜ்ஜியம் செய்து ஸர்வே அதிகாரியின் தீர்மானத்தை மாற்றுதிருந்து பின்னால் இருவருக்கும் ஏற்பட்ட வழக்கில் மேற்கூறிய ஸர்வே ஆபீஸருடைய தீர்மானம் ரீஜ-டிகேடாவாக ஆட்சேபிக்கப்பட்டதை புல்பெஞ்சார் ஒப்புக்கொண்டு ஸிவில் வியாஜ்ஜியத்தைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள்.

—o—

சீவ் ஜஸ்டிஸ், ஏய்லிங் &

குமாரஸாமி சாஸ்திரிகள் - J-J.

O S, A 69 of 1917 - 18 பிப்ரவரி 1919.

ஹைகோர்ட் அசல் தாப்பில் பைசலான கேஸின் செலவுகளைக் கணக்குப் பார்த்து டிக்கியில் சேர்க்கும் பொருட்டு ஏற்பட்டிருக்கிற உத்தியோகஸ்தருடைய கணக்கு நிர்ணயத்தை ஆட்சேபித்த பார்ட்டியின் விண்ணப்பத்தின்பேரில் ஜட்ஜியவர்கள் ரிவியூ செய்து எதிரிக்கு நோடீஸ் கொடுத்துவிட்டு ரூல் 38, 39-ன்படி செலவுதொகை விஷயமாய் செய்த உத்தரவானது அப்பீலுக்கு யோக்கியமுள்ளதாகுமென்று 35-மதாஸ 1-ஐ அனுஸரித்துத் தீர்மானிக்கப்பட்டது.

—o—

பேக்வெல் & பிலிப்ஸ் - J-J.

S. A, 905 of 1918 - 18 பிப்ரவரி 1919.

கணவனை விட்டுப் பிரிந்து பிரத்தியேகமாய் வசிக்கிற மனைவியின் வசத்திலிருக்கிற மைனர் சிசுவைக் கணவன் தன்னுடைய சுவாதீனத்திற்குக் கொண்டுவருவதற்காக மனைவியின் பேரில் அசல் வியாஜ்ஜியம் தொடுக்கவேண்டுமோ அல்லது கார்டியன் & உவார்டுஸ் ஆக்டின்படி சில்லறை மனு நடவடிக்கையில் பரிகாரம் தேடலாமா வென்ற பாயிண்டு புல் பெஞ்சுக்கு ரிபர் செய்யப்பட்டது.

—o—

ஓல்ட் வீல்டு & சேஷகிரி அய்யர் - J-J.

L. P. A. 39 of 1918-20 பிப்ரவரி 1919.

ஸ்மால்-காஸ்கோர்ட்டில் தாகலான யாதொரு பிராதை வாபீஸ் செய்து சரியான கோர்ட்டில் தாகல் செய்யும்படி உத்தரவளித்ததின்பேரில் அசல் தாப்பில் பிராதை தாகல் செய்து விஜாரணையாகி ஏற்பட்ட தீர்மானத்தின்பேரில் அப்பீல் ஈரங்கி காலத்தில் ஸ்மால்காஸ் கோர்ட்டார் தங்களுக்கு அதிகார வரம்பில்லையென்று பிராதை வாபீஸ் செய்த உத்தரவின் நியாயத்தைப்பற்றி ஆட்சேபிக்கத் தகாதென்று தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

—o—

சீவ்ஜஸ்டிஸ் & ஏய்லிங் - J-J.

A. S. 245 of 1918 - 20 பிப்ரவரி 1919.

சில தர்ம சொத்துக்களுக்கு டிரஸ்டீயாகிய ஹிந்து விதவையின்பேரில் ஷியாளுக்குப் பின் பாத்தியதையுடைய அனந்தர வாரிஸ்தாரன் ஸி. பி. ஸி. 92-வது பிரிவில் ஏற்பட்டிருக்கிற பரிகாரங்களுக்காக தாவா செய்ய அட்வொகேட்

ஜெனரல் அவர்களுடைய அனுமதி பெறவேண்டுமென்றும் ஜனப்பொது நலத்திற்குரிய பாத்தியதையைப் பாராட்டாமல் தனக்குரிய அனந்தர வாரிஸ் பாத்தியதையை முன்னிட்டு வியாஜ்ஜியம் செய்த போதிலும் மேற்கூறிய அனுமதி பெறவேண்டுமென்று தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

—o—

பேக்வெல் & பிலிப்ஸ் - J-J.

S. A. 698 of 1918 - 24 பிப்ரவரி 1919.

மாச்சரியத்துடன் தப்புப் பிராது தொடுத்ததற்காக நஷ்டப்பரிகார தாவா செய்ததில் பின்வரும் காரணத்தால் காலாவதி தோஷம் வாதிக்கப்பட்டது. முதலில் கி. பி. கோ. 253 (1) வது பிரிவின்படி ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டார் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டதை டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட்டார் மறு விஜாரணைக் குத்தரவளித்தார்கள். ஹைகோர்ட்டார் மறு விஜாரணை உத்தரவை ரத்து செய்து ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டாருடைய விடுதலை உத்தரவானது ரிவிஷனுக்கு யோக்கியமான டிஸ்சார்ஜ் ஆர்டரல்லவென்றும் (Acquittal) என்ற விடுதலை உத்தரவாகுமென்றும் அதன்பேரில் ஹைகோர்ட்டுக்கு கவர்ன்மெண்டு அப்பீல்பரிகாரமுண்டேயொழிய டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட்டார் மறு விஜாரணைக் குத்தரவளித்தது பிசகென்று தீர்மானித்தார்கள் ஹைகோர்ட் உத்தரவின் தேதி முதல் ஒரு வருஷத்திற்குள் வாதி நஷ்டப்பிராது கொண்டு வந்தது சரியென்றும் ஜாயிண்டு மாஜிஸ்டிரேட்டாருடைய உத்தரவின் தேதி முதல் காலாவதி கணிக்கப்படவேண்டியதில்லை யென்றும் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

—o—

பேக்வெல் & பிலிப்ஸ் - J - J.

S. A. 1342 of 1918-19 பிப்ரவரி 1919,

ஸ்தாவர சொத்துக்களை ஒருவருக்கொருவர் பரிவர்த்தனை செய்துகொண்ட ரெஜிஸ்டர் தஸ்தவேஜில் சொத்து பாத்தியதை விஷயமாக யாதொரு குறைவும் தகாதாவும் உண்டானல் அவரவர்களுடைய சொத்துக்களை அவரவர்கள் திரும்பியடையவேண்டியதான நிபந்தனையானது அதாவது குறைவான சொத்து பாத்தியதையுள்ள சொத்தை மாற்றிக்கொடுத்தவன் தான் பெற்ற சொத்தைத் திருப்பிக் கொடுத்துவிட வேண்டியதென்ற நிபந்தனையானது இருதரத்தாராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தது.

வாதி, தான் மாற்றிக்கொண்ட சொத்தை அன்னியனுடைய மேலான பாத்தியதையால் இழந்துபோகலாச்சுது, ஆகவே பரிவர்த்தனையின் ஷாத்துப்படி எதிரியினிடமிருந்து தான் மாற்றிக்கொடுத்திருந்த சொத்தைக் கிரயம் பெற்ற பிரதிவாதியின்பேரில் தன்னுடைய சொத்தை சுவாதீனமடையும்பொருட்டு தாவா செய்ததில் வாதி சொத்தை இழந்த மூன்று வருஷங்களுக்குப் பின் இந்த தாவா கொண்டு வந்தமையால் எதிரியால் ஒப்புக்கொள்ளப்பட்டிருந்த உடன்படிக்கையை நிறைவேற்றுவதற்காக (Specific Performance of Contract) தாவா செய்ய 3-வருஷ காலாவதியென்ற நியாயத்தைச் சொல்லிக் காலாவதி தோஷமென்ற எதிர்வாதம் செய்யப்பட்டது. ஹைகோர்ட்டார் அந்த வாதத்தை ஒப்புக்கொள்ளாமல் காலாவதி ஆக்டு 143-வது ஆர்டிகிலின்படி கிரய தஸ்தவேஜில் கண்ட நிபந்தனையை நிறைவேற்றக் கூடாத காரணத்தால் வாதி தன்னுடைய சொத்தை சுவாதீனமடைய தாவா செய்வதற்குத் தன் வசமிருந்த சொத்தை இழந்துபோக நேரிட்ட காலமுதல் 12-வருஷ காலாவதியுண்டென்று அபிப்பிராயப்பட்டது மல்லாமல் பரிவர்த்தனையில் கண்ட நிபந்தனையானது அதில் சம்பந்தப்பட்ட பார்ட்டிகளையும் அவருடைய பாத்தியதையைக் கிரயம் பெற்றவர்களையும் கட்டுப்படுத்துமென்றும் சொல்லப்பட்டது.

—o—

அப்துல் ரஹீம் & ஸ்பென்ஸர்-J-J.

A.S. 60 of 1918-12 பிப்ரவரி 1919.

கூட்டுக்குடும்ப சொத்துக்களின் பாகப்பிரிவினையில் மைனர் வாதிகளுக்கு பங்கு விகிதம் கிடையாதென்று விலக்கப்பட்டதை மைனர்க

ளுடைய தாயார் கார்டியனுக மைனர்களின் பாத்தியதையை ஸ்தாபிக்கப் பிரயத்தனப்பட்டும் பயனற்றுப் போனதால் ஷை மைனர்கள் மேஜரான மூன்று வருஷங்களுக்குப் பின்னும் அவர்களை பாகப் பிரிவினையில் விலக்கப்பட்ட காலத்திலிருந்து 12-வருஷங்களுக்குப் பின்னும் மைனர் வாதிகள் மேஜராகத் தங்கள் பாகத்தை பற்றி வியாஜ்ஜியம் தொடுத்துத் தங்களுக்கு வியாஜ்ஜிய மூலத்தின் காலாவதியானது மேஜர் தசை வந்த பிறகு தங்களை விலக்கப்பட்டிருந்த தகவல் தெரியவந்த கால முதல் கணிக்கப்படவேண்டுமென்று காலாவதி தோஷத்திற்கு சமாதானமாகச் சொல்லப்பட்டது. ஹைகோர்ட்டார் அப்பீல் தீர்மானத்தில் அந்த சமாதானத்தை ஒப்புக்கொள்ளாமல் விலக்கப்பட்ட தகவல் கார்டியனுக்குத் தெரியவந்த விஷயம் மைனர்களுக்கும் தெரியவந்ததாக சட்டக் கருத்தில் மதிக்கவேண்டுமென்றும் ஆகவே மைனர்கள் மேஜராக தாவா செய்தபோதிலும் கார்டியனுக்குத் தகவல் தெரிந்த முதல் காலாவதி கணிக்கப்படவேண்டுமென்றும், மைனர்கள் மேஜரான பிறகு 3-வருஷங்களுக்குள்ளாகிலும் தாவா செய்திருக்கவேண்டுமென்றும்,

தவிர பிரதிவாதிகளில் ஒருவராகிய கோர்ட் ஆப் உவார்டுஸ் (Court of Wards)-க்கு ஸி.பி.ஸி. 80-வது பிரிவின்படி முன் நோடீஸ் கொடுத்த வாய்தா காலமானது காலாவதி கணிப்புக்குக் கூடிவாராதென்றும் அபிப்பிராயங் கொடுத்து வாதிகளுடைய பாக வியாஜ்ஜியத்திற்குக் காலாவதி தோஷமென்று தீர்மானித்தார்கள்.

—o—

சேஷகிரி அய்யர் & பிலிப்ஸ்-J. J.

(திருநெல்வேலி ஜில்லா)

S.A. 2158 of 1917 - 18 நவம்பர் 1918.

அஸான் அலியார் மரைக்காயர்

vs

மாசிலாமணி நாடார்

இரண்டு போலீஸ்காரர்கள் வாதியினுடைய வீட்டில் திருட்டு சொத்திருப்பதாய் சந்தேகித்து சோதனை போட்டதில் யாதொன்றும் அகப்படாத காரணத்தால் வாதி போலீஸ்காரர்களிருவர்மீது நஷ்டப்பரிகாரத்திற்காக டி-மு கோர்ட்டில் தாகல் செய்ததில் 2-ம் பிரதிவாதி சோதனை ஸ்தலத்தைச் சேர்ந்த போலீஸ் ஸ்டேஷனுக்குறிய ஸ்டேஷனுபிஸரல்லவென்றும் ஸ்டேஷனுபிஸர் வேறு டியூடியில் சென்றிருக்கிற காலத்தில் 2-ம் பிரதிவாதி அந்த உத்தியோக நிலைமையை தரித்துக்கொண்டு சோதனை போடலாயக்குள்ளவராய் நடந்தது சட்ட விரோதமென்று சோதனை இலாகாவுக்குப் புறம்பான ஸ்டேஷனைச்சேர்ந்த 1-ம் பிரதிவாதி தாவா சோதனையில் சம்பந்தப்பட்ட அதிகாரியாய் நடந்துகொண்டது ஒழுங்கீனமென்றும் தீர்மானித்து ஒவ்வொருவர் மீதும் ரூ 100-க்கு நஷ்டப்பரிகார டிக்கிரீயளித்தார்கள், அப்பீலில் ஜில்லா கோர்ட்டார் 2-ம் பிரதிவாதியைப் பற்றினமட்டில் வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்து 1-ம் பிரதிவாதி அதிகார வரம்பில்லாத ஸ்தலத்தில் உத்தியோகதோரணையை தரித்து நடந்துகொண்டது பிசகென்று சொல்லி ரூ 1-க்கு நஷ்டப்பரிகார டிக்கிரீயளித்தார்கள்.

அதன்பேரில் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் தாகல் செய்தார், 1-ம் பிரதிவாதியும் தன் பேரில் ஏற்பட்ட டிக்கிரீயை மாற்றும் பொருட்டு க்ராஸ் அப்பீல் மிமோ தாகல் செய்தார். 1-வது அப்பீலில் வாதியின் பிராது முற்றிலும் தள்ளுபடியாகி 2-ம் பிரதிவாதியின் கிராஸ் அப்பீல் அனுகூலமாச்சுது.

ஹைகோர்ட் தீர்மானத்தின் காரணச் சுருக்கமாவது:—

1915ளு ஜனவரிமீ 15வ யில் சோதனை போடப்பட்டிருக்கிறது. ஸ்டேஷனுபிஸராகிய ஸப் இன்ஸ்பெக்டர் 26வ வெளி கிராமங்களுக்கு டியூடியின்பேரில் சென்றவர் 29வ திரும்பி வந்ததாக நிச்சயமாய்ச் சொல்லக்கூடவில்லை. 2-ம் பிரதிவாதி கொடுத்த வாக்குமூலத்தில் ஸப் இன்ஸ்பெக்டர்ஸ்டேஷனில் ஆஜரில்லாத காலத்தில் தான் அடுத்த அந்தஸ்திலுள்ளவராய் கிரிமினல் புரொஸிஜர் கோடு 4 (P)-வது பிரிவின்படி கான்ஸ்டேபில் அந்தஸ்துக்கு மேலானவராய் ஸ்டேஷன் சார்ஜிலிருந்திருக்கிறபடியால் அவர்

அதிகார வரம்புடன் சோதனை போட்டிருக்கிறதாகச் சொல்லவேண்டும். சோதனை போடுவதற்காக ஸ்டேஷனை விட்டு வெளியே போகிற காலத்தில் 2-ம் பிரதிவாதி ஸ்டேஷன் ஆபிஸராகார் என்ற கட்சி ஒப்புக்கொள்ளத் தகாது காயமான ஸ்டேஷனுபிஸ் டியூடியின்பேரில் வெளியில் சென்றிருக்கிற காலத்தில் அடுத்த அந்தஸ்துள்ளவர் ஸ்டேஷனுபிஸாக மதிக்கப்பட்டு டியூடியை நடத்தலாமென்ற சட்ட முறையில் நடக்கவேண்டிய டியூடிகளை தாமதமின்றி நடத்துவதற்காக அதிகமான நபர்கள் ஏற்படுத்தப்படுகிறார்கள், ஆகவே 2-ம் பிரதிவாதி தன் அதிகாரத்திற்கு மீறி நடந்ததாகச் சொல்லத் தகாது.

1-ம் பிரதிவாதி சோதனை இலாகாவுக்கு வெளியிலுள்ள வேறொரு ஸ்டேஷனுக்குத் தலைவராக இந்தக் கேஸில் சோதனைக்கு வந்திருக்கிறார். திருட்டு நடந்த இலாகா உத்தியோகஸ்தர் வெளி இலாகாவிலுள்ள திருட்டு சொத்தைப்பற்றி சோதனை போடும் சமயத்தில் அவ்விலாகாவின் போலீஸ் ஆபிஸரை உதவிக்கு வரவழைத்துக் கொள்ளலாம், இந்தக் கேஸில் அவ்வித சந்தர்ப்பத்தையிட்டு 1-ம் பிரதிவாதி சோதனைக்கு வரவில்லை. ஆகையால் 1-ம் பிரதிவாதி அதிகார வரம்பில்லாமலே வெளி ஸ்தலத்திற்கு வந்து சோதனை நடத்தியிருக்கிறபடியால் அதிகார வரம்பை மீறி நடந்திருக்கிறதாகச்சொல்லவேண்டும். 2-ம் பிரதிவாதி அதிகார வரம்பில் நடந்துகொண்டமையால் 1-ம்பிரதிவாதியின் சன்னித்யானது ஒழுங்கீனமாயினும் அதை கவனிக்கத் தேவையில்லையென்று வாதிக்கப்படுகிறது. சட்ட சம்மதமான நடத்தைக்கு உதவி செய்கிறவன் சட்ட விரோதமாய் நடந்ததாகச் சொல்லத் தகாது. [1860) 2 F & F 51 ஐப் பார்க்கவும். 1-ம் பிரதிவாதியின் அந்தஸ்தானது 2-ம் பிரதிவாதியின் அந்தஸ்தைவிட மேலானதாகையால் 1-ம் பிரதிவாதி சகாயத்திற்கு வந்ததாக நிச்சயமாய்ச் சொல்லக்கூடாது. 1-ம் பிரதிவாதிமேலதிகாரியாக சோதனை நடத்தினதாகவே சொல்லலாம். ஆனால் வாதியின் வீட்டிற்குள் 2-ம் பிரதிவாதி அதிகாரவரம்புடன் பிரவேசித்து சோதனை போட்டமையால் அவர் சட்ட சம்மதமான காரியத்தை நடத்தினதில் 1-ம் பிரதிவாதி சம்பந்தப்பட்டது நஷ்டப்பரிகாரத்திற்கு ஏதுகரமான தப்பு நடத்தை யாகுமா வென்று யோஜித்துப் பார்க்குமிடத்து 2-ம் பிரதிவாதி நஷ்டப்பரிகாரத்திற்குப் பாத்திரராகாரென்று ஹானரபில் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் துரையவர்களின் அபிப்பிராயத்தை அனுஸரித்து ஹானரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள் 1-ம் பிரதிவாதியைப் பற்றி ஜில்லா ஜட்ஜியவர்கள் அளித்த டிக்கிரீயைமாற்றி வாதியின் பிராதை முற்றிலும் தள்ளுபடி செய்து **விட்டார்கள்**. 36 M. L. J. 252.

—o—

புல்பெஞ்சு கேஸ்.

சீவ்ஜஸ்டிஸ், ஒல்ட் வீல்டு &

சேஷகிரி அய்யர் - J. J.

(திருச்சினுப்பள்ளி ஜில்லா)

S. A. 1815 of 1917-4 பிப்ரவரி 1919.

வைதீசுவா அய்யர்

vs

ஸ்ரீனிவாஸராகவய்யங்கார்

யாதொரு அடமான தஸ்தவேஜை வாதி மேடோவர் பெற்று தாவா செய்ததில் எதிரியின் 1-வது சாட்சிக்கு வாதி (Benamidar) பெயரிரவல்காரரென்று அதாவது வாதி யாதொரு பிரதிப் பிரயோஜனமும் செலுத்தாமல் மேடோவர் பெற்று எதிரியின் 1-வது சாட்சியாகக் கோரப்பட்ட அடமானதாருக்கு சகாயமாகத் தான் தாவா செய்து கடனை வசூலிக்கும் சிரமத்தை ஏற்றுக்கொண்டவராக ருஜுபாகத்தில் ஏற்பட்டமையால் ஜில்லா கோர்ட்டார் பெயரிரவல்காரருக்கு தாவா செய்யும் பாத்தியதை கிடையாதென்று அபிப்பிராயப்பட்டு வாதியின் பிராதைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் 2-வது அப்பீலை ஈரங்கி கேட்ட ஹானரபில் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் துரையவர்களும் ஹானரபில் ஜஸ்டிஸ் நேபியர் துரையவர்களும் வாதிக்காக எடுத்துக் காட்டப்பட்ட (1917) 41 மதராஸ் 435-ன் தீர்மான அபிப்பிராயமானது (1906)-30 மதராஸ் 245-ன் நியாயத்திற்கும் அதை அங்கீகரித்த (1910)-34 மதராஸ் 143-ன் நியாயத்திற்கும் விரோதமாய் ஏற்

பட்டிருக்கிறபடியால் 41 மதராஸ் கேஸை முடிவான அபிப்பிராயமாய் ஒப்புக்கொள்ளாமல் பிஞமிதார் தன்னுடைய பெயரை இரவலாய்க் கொடுத்த காரணத்தைத் தவிர்த்து வேறு விதமான யாதொரு பாத்தியதை அல்லது அதிகாரத்தை முன்னிட்டு தாவா செய்ய வந்ததாக ருஜுப்படுத்தவேண்டுமென்ற முந்திய தீர்மானங்களின் நியாயத்திற்கு விரோதமாக யாதொரு தீர்மான அபிப்பிராயங்கள் ஏற்படாதபடியாலும் அப்படிப்பட்ட யாதொரு தீர்மானங்களை 41-மதராஸ் கேஸில் ஆதாரங்கொண்டதாய்க் காணப்படாதபடியாலும் 41-மதராஸ் கேஸானது ஒரு தனிமையான (Stare decisis) அபிப்பிராயம் ஏற்பட்டதாக யோஜித்து அதை அனுஸரிக்கவேண்டிய கடமையில்லையென்றாலும் அந்தத் தீர்மானம் ஒரு அதாரிடியாக சட்ட ரிபோர்ட்டுகளில் பிரசுரிக்கப்பட்டிருப்பதைக் கவனித்து "பிஞமிதார் தாவா செய்ய லாயக்குள்ளவரா" என்ற பாயிண்டைப்பற்றி புல் பெஞ்சுக்கு ரிபர் செய்தார்கள்.

புல்பெஞ்சார் ஒரே அபிப்பிராயமாக 1918-ல் ஏற்பட்டிருக்கிற 36 M. L. J. 68-ன் பிரிவி கௌன்ஸில் தீர்மான அபிப்பிராயத்தை அனுஸரிக்கக் கடமைப்பட்டவர்களாய் பிஞமிதார் சொந்தக்காரனுக்கு ஒரு டிரஸ்டீயாகவும், பிரதிநிதியாகவும் மதிக்கப்படலாமாகையால் இந்தியாவில் ஏற்பட்டிருந்த பற்பல தீர்மானங்களையும் யோஜித்துப்பார்த்து பிரிவி கௌன்ஸிலார் கொடுத்திருக்கிற அபிப்பிராயத்தை அங்கீகரித்து பிஞமிதார் தாவா செய்ய லாயக்குள்ளவரென்று அபிப்பிராயங் கொடுத்தார்கள். (36-M L. J, 289)

—o—

ஜஸ்டிஸ் சதாசிவய்யர் & நேபியர்-J.

(குண்டூர் ஜில்லா)

Crl. R. C. 583 of 1918-16 ஜனவரி 1919.

நல்லூரி செஞ்சய்யா — மனுதார்.

சிருஷ்டனையென்று தீர்மானிக்கப்பட்ட யாதொரு பிராமிஸரி நோட்டைப்பற்றி 1-முதல் 4-எதிரிகள் ஒங்கோல் டி-மு கோர்ட்டில் கொடுத்த வாக்கு மூலங்கள் பொய்யென்று சொல்லி நால்வரையும் ஒங்கோல் 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டார் ஸெஷனுக்கு கமிட் செய்யத்தகுமாவென்று நிர்ணயிக்கும்பொருட்டு பிரதம விஜாரணை செய்து இ. பி. கோ. 193-வது பிரிவின்படி நால்வரின்பேரில் குற்றம் சாட்டுவதற்கு மேற்படியார்கள் டி-மு கோர்ட்டில் கொடுத்திருக்கிற வாக்கு மூலங்கள் அவர்களுக்குப் படித்துக்காட்டி ஒப்புக்கொள்ளப்பட்டதாக ஏற்படாத காரணத்தால் அந்த வாக்கு மூலங்களை ருஜு பாகத்தில் ஏற்றுக்கொள்ளத் தகாதென்றும் அவைகளில் காணப்பட்டிருக்கிற விஷயங்கள் பொய்யென்று ருஜுப்படுத்த வேறுவிதமான சாட்சியமும் ஏற்றுக்கொள்ளத் தகாதென்றும் ஆகவே 193-வது பிரிவின்படி சாட்டப்படுகிற குற்றத்தைப் பற்றினமட்டில் நால்வரையும் டிஸ்சார்ஜ் செய்து 1-வது எதிரியின்பேரில் இ. பி. கோ, 471-வது பிரிவின்படி சிருஷ்டனை தஸ்தவேஜை கோர்ட்டில் யதார்த்தமானதென்று உபயோகப்படுத்தினக் குற்றம் சாட்டப்படுவதற்கு மேற்கூறிய நான்கு சாட்சி வாக்குமூலங்களை ஆதாரங்கொண்டு 1-வது எதிரியை சிருஷ்டனை தஸ்தவேஜுடன் சம்பந்தப்படுத்தக் கூடாதென்று அபிப்பிராயப்பட்டு அந்தக் குற்றத்தைப்பற்றியும் 1-வது எதிரியை டிஸ்சார்ஜ் செய்துவிட்டார்கள். மேற்கூறிய டிஸ்சார்ஜ் ஆர்டரின் பேரில் ஜில்லா ஜட்ஜியவர்களுக்கு கிரி பி. ஸி. 435, 437-வது பிரிவின்படி ரிவிஷன் விண்ணப்பம் கொடுக்கப்பட்டது. ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் டிஸ்சார்ஜ் ஆர்டரை ரத்து செய்துவிட்டு 1-வது எதிரியை 193 & 471-வது பிரிவுகளின்படி குற்ற விஜாரணைக்காக ஸெஷனுக்குக் கமிட் செய்யவேண்டியதென்று 2-வது கிளாஸ் மாஜிஸ்டிரேட்டாருக்குக் சட்டளையிட்டு 2-3-4-ம் எதிரிகளைப்பற்றின மட்டில் பிராதை மேல் விஜாரணை செய்யும்பொருட்டு வேறு மாஜிஸ்டிரேட்டாருக்கு உத்தரவளிக்க வேணுமாய் டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டாருக்கு ஆயஞ்ஞாபித்தார்கள். 2-3-4-ம் எதிரிகளின் பேரில் சாட்டப்பட்ட குற்றங்களை தனித்தனியாக விஜாரித்து சட்டப்படி பைசலளிக்கவேண்டுமெனவும் ஆர்டர் அளித்தார்கள். ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் அளித்த உத்தரவுகள் சட்ட விரோதமென்று சொல்லி ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் தாகல் செய்யப்பட்டது.

ஹைகோர்ட்டார் அளித்த உத்தரவில் 2-3-4-வது எதிரிகளைப்பற்றினமட்டில் டிஸ்டிரிக்டு மாஜிஸ்டிரேட்டாருக்கு அளித்த உத்தரவு சட்டவிரோதமென்றும் படித்துக்காட்டி ஒப்புக்கொள்ளப் படாத வாக்கு மூலங்களைப்பற்றிப் பொய் யென்று 193-வது பிரிவின்படி குற்றம் சாட்டுவதற்கு அவ்வித வாக்கு மூலங்களை ஆதாரமாய் ருஜூபாகத்தில் எற்றுக்கொள்ளுவது ஜனப் பொது நலத்திற்கு விரோதமான நீதி தவரக்கூடிய அபாயகரமான முறையென்றும், ஸெஷன்ஸ் கோர்ட்டாரைத் தவிர்த்து இதாமான கிரிமினல் கோர்ட்டாரும் விஜாரணை செய்யத் தக்க யாதொரு பிராதை விஜாரித்து ஸெஷனுக்குக் கமிட் செய்யும்படி மாஜிஸ்டிரேட்டாருக்கு உத்தாவளித்தது சட்ட விரோதமென்றும் அபிப்பிராயப்பட்டு 193-வது பிரிவின்படி 1-வது எதிரியை கமிட் செய்யும்படி அளித்த உத்தாவை ரத்து செய்து 193-வது பிரிவின்படி எதிரிகளின் பேரில் குற்றம் சாட்டுவதற்கு மேற்படியார்களுடைய வாக்குமூலங்களை எற்றுக்கொள்ளத் தகாதென்று சொல்லி அக் குற்றத்திலிருந்து அனைவரையும் சப் மாஜிஸ்டிரேட்டார் டிஸ்சார்ஜ் செய்தது நியாயமாகுமென்று சொல்லி ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் 2-3-4-வது எதிரிகளைப் பற்றினமட்டில் செய்த உத்தாவையும் ரத்து செய்துவிட்டார்கள்.

471-வது பிரிவின்படி சாட்டப்பட்ட குற்றத்தைக் கவனித்து 1-வது எதிரியை அதற்காக கமிட் செய்யும்படி அளித்த உத்தாவானது சட்ட விரோதமென்றாலும் அதாவது கவர்ன்மெண்டு பிராமிஸரி நோட்டை சிருஷ்டனை செய்த குற்றத்திற்கு ஸெஷன்ஸ் கோர்ட்டார் மட்டும் பைசல் விஜாரணை நடத்தவேண்டுமாதலால் தாவா பிராமிஸரி நோட்டைப்போன்ற தஸ்தவேஜுகளின் சிருஷ்டனைக்காக பைசல் விஜாரணை நடத்த மற்ற கிரிமினல் கோர்ட்டாருக்கும் அதிகார வரம்புண்டென்ற காரணத்தால் ஸெஷன்ஸ் ஜட்ஜியவர்கள் கமிட்டு செய்யும்படி உத்தாவளித்தது சட்ட விரோதமென்றாலும் கிரிமினல் புரொஸிஜர் கோடு 439-வது பிரிவின்படி ஹைகோர்ட்டாருக்கு எற்பட்டிருக்கிற அதிகாரத்தைப் பிரயோகித்து இந்தக் கேஸில் 1-வது எதிரி தாவா பிராமிஸரி நோட்டை யதார்த்தமான தஸ்தவேஜாகக் கோர்ட்டில் உபயோகப் படுத்தினதாகவும் அது சிருஷ்டனை யென்றும் ருஜூ அம்சத்தால் துலங்குவதால் 1-ம் எதிரியை 471-வது பிரிவின்படி குற்ற விஜாரணைக்காக ஸெஷன்ஸ் கோர்ட்டுக்குக் கமிட் செய்ய வேண்டுமென்று சப்மாஜிஸ்டிரேட்டுக்கு உத்தாவளித்தார்கள்.

யாதொரு சாட்சி வாக்கு மூலத்தைப் படித்து காட்டினபொழுது சாட்சி அதை சரியென்று அங்கீகரித்து வந்ததைக் கோர்ட்டார் கவனித்து வாரத ஒழுங்கீனங்களை அவமதிக்கலாமென்றாலும் படித்துக் காட்டப்படாத பிசகைப் பற்றி கவனித்து அவ்வித வாக்குமூலத்தை ருஜூவில் எற்றுக்கொள்ளக் கூடாதென்று சொல்லப்பட்டு 34-மதாாஸ் 141-ன் அபிப்பிராயம் எடுத்துக் காட்டப்பட்டது (36. M, L. J. 291.)

—o—

சதாசிவய்யர் & ஸ்பென்ஸர்-J.J.

(குண்டூர் ஜில்லா)

S.A. 1848 of 1917-23 அக்டோபர் 1918.

துலிபல்ல புச்சய்யா

vs

குப்பவெங்கடகிருஷ்ணய்யா

ஒரு பிராமிஸரி நோட்டை எழுதிக்கொடுத்து கடன் வாங்கியிருந்த 1-ம் பிரதிவாதியின்பேரிலும் அவனுடைய மக்களாகிய 2-3-ம் பிரதிவாதிகளின பூர்வீக சொத்து பாத்தியதையைக் கட்டுப்படுத்தும் வண்ணமாக மக்களின்பேரிலும் சேர்த்து வாதி ஷை நோட்டின்பேரில் எற்பட்டிருந்த பாக்கித்துகையை வசூலிக்கும்பொருட்டு தெனலி டி-மு கோர்ட்டில் தாவா செய்தார். இரண்டு பாயிண்டுகள் வாதிக்குப் பிரதிகூலமாய் கீழ்கோர்ட்டுகளில் தீர்மானிக்கப்பட்டமையால் வாதி ஹைகோர்ட்டில் 2-வது அப்பீல் தாகல் செய்யவேண்டியதாயிற்று.

முதலாவது 1-ம் பிரதிவாதியால் செலுத்தி வரப்பட்டிருந்த துகை யாவற்றையும் அசலுக்கென்றே வரவு வைத்துக்கொண்டு அவைகளுக்கு எதிர் வட்டி காட்டி மொத்த வட்டித்துகை

யிலிருந்து கழித்து ஏற்படும் வட்டிக்காகவும் அசல் பாக்கித்தொகைக்கும் வாதி தாவா செய்ய வேண்டுமென்றும் வாதிக்குச் செலுத்தப்பட்டிருந்த தொகையிலிருந்து செலுத்தப்பட்ட தேதியில் கட்டுகிற வட்டிக்காகச செல்லுவைத்தது போக மிகுதியை மட்டும் வாதி அசலுக்கு வரவு வைத்துக்கொண்டது பிசகென்று கீழ்கோர்ட்டார் அபிப்பிராயப்பட்டார்கள். ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலில் (1871) 6 பங்காள லா ரிபோர்ட் 110, (1856) 6 M. I. A 289, 29 I.C. 718, 1916-ம் வருஷத்திய 2-வது அப்பீல் 143 ஆகிய கேஸ்களின் தீர்மான நியாயங்களை ஆதாரங்காட்டி செலுத்திவரப்பட்ட தொகை இன்ன வகைக்கென்று குறித்துச் சொல்லப்படாத சந்தர்ப்பத்தில் பாக்கி நின்ற வட்டிக்காகச் செல்லு வைத்ததுபோக மிகுதியை அசலுக்கு வரவு வைத்தது நியாயமென்று வாதிக்கனுகூலமாய்த் தீர்மானித்தார்கள்.

இரண்டாவதாக தாவா கடன் தொகையை 1-ம் பிரதிவாதி துர்வினியோகம் செய்வதற்காக வாங்கினதென்றும் ஆகவே பூர்வீகமான சொத்தில் தங்கள் பாகத்தைப்பொருத்து நோட்டின் பாக்கிக்காக டிக்கிரீயளிக்கத்தகாதென்றும் 2-3-ம் பிரதிவாதிகள் எதிர்வாதம் செய்ததைக் கீழ்கோர்ட்டார் ஒப்புக்கொண்டு 1-ம் பிரதிவாதியின் சொத்து பாகத்தைப் பொருத்தும் டிக்கிரீயளித்து மக்களின் பொருப்பை நீக்கிவிட்டார்கள். வாதியின் 2-வது அப்பீலில் இதைப்பற்றி ஆர்சியுமெண்டாகி இந்தக்கேஸில் நோட்டுத் தொகையானது அல்லது அதில் யாதொரு பாகமாவது யாதொரு குறித்த துர்வினியோகச் செலவுக்குபயோகப்படுத்தப்பட்டதாக ருஜு அம்சம் கிடையாதென்றும் 1-ம் பிரதிவாதி கடன் வாங்கினகாலத்தில் குடும்பச் செலவுக்கு குடும்ப சொத்து வருமானம் போதுமானதென்றும் 1-ம் பிரதிவாதி யாதொரு வியாபாரத்திலும் பிரவேசிக்கவில்லையென்றும் பொதுவாக 1-ம் பிரதிவாதி வீணான செலவுகள் செய்கிற துர்நடத்தைக்காரன் என்றும் ருஜுப்படுத்தினால் போதாதென்றும் சொல்லி, 25 M. L. J. 27, 6 அலகபாத் 193, 21 அலகபாத் 238, 30 அலகபாத் 156, 6 பம்பாய் 520, 14 பம்பாய் 320, 17 C. W N. 280, 17 I, C 735 இவைகளின் தீர்மான அபிப்பிராயங்களை அனுஸரித்து 1 Pat L. J. 86-ல் ஏற்பட்டிருக்கிற 1916-ம் வருஷத்திய தீர்மான நியாயத்தை ஒப்புக்கொள்ளாமலும் 2-3-ம் பிரதிவாதிகள் துர்வினியோகத்தைப் பற்றி நேரான ருஜு அம்சம் விடாத காரணத்தால் அவர்களுடைய சொத்து பாகத்தைப் பொருத்தும் டிக்கிரீயளிக்கிற வண்ணமாய் கீழ்கோர்ட் டிக்கிரீயை மாற்றினார்கள் வாதி தன்னுடைய செலவை தானே வகிக்க வேண்டுமென்றும் 2-3-ம் பிரதிவாதிகளும் தங்கள் செலவைத் தாங்களே வகிக்கவேண்டுமென்றும் ஆனால் வாதியின் அசல் கோர்ட் செலவை 1-ம் பிரதிவாதி செலுத்தவேண்டியதென்ற உத்தரவை மாற்றாமலும் ஹைகோர்ட்டார் 2-வது அப்பீலைப் பைசல் செய்தார்கள். 36 M. L J 295.

—o—

ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யர் & பிலிப்ஸ்-J.

(வட ஆர்காடு ஜில்லா)

C. M. A. 55 of 1918-6 டிசம்பர் 1918.

சேது ராமஸ்வாமி நாயனிவாரு

vs

சயித்மீர் ஹஸ்ஸம் சாகிபு.

டிக்கிரீபாக்கிதாரனுடைய சொத்துக்கள் 1917 ஏப்பிரல் 16-ல் கோர்ட்டாரால் ஏலம் போடப்பட்டு விக்கிரயமாச்சுது. ஜுன் 22-ல் டிக்கிரீ பாக்கிதாரன் ஷை சொத்துக்களை மூன்றாவது மனிதன் பெயருக்கு விக்கிரயம் எழுதிக்கொடுத்துவிட்டார். ஜுன் 25-ந் தேதியில் டிக்கிரீ பாக்கித் தொகையுடன் ஏலச் செலவுகள் யாவற்றையும் சேர்த்துக் கோர்ட்டில் டிபாஸிட்செய்துவிட்டு ஸி. பி. வி. ஆர்டர் 21-ரூல் 89-ன்படி விண்ணப்பம் கொடுத்து ஏலத்தை ரத்துசெய்ய வேணுமாய்க் கோரிக்கொண்டார். ஜுன் 22-ல் ஏற்பட்ட விக்கிரய தஸ்தவேஜானது ரெஜிஸ்டராகவில்லை. விண்ணப்பம் கொடுத்தகாலத்தில் சொத்து பாத்தியதையானது தன்னைவிட்டுப் போனதாக ஏற்படக்கூடாதென்ற கருத்துடன் முந்தி விக்கிரயம் பெற்ற பார்ட்டிக்கே 1917 ஆகஸ்டு 20-ல் வேறு தஸ்தவேஜெழுதி ரெஜிஸ்

டர் செய்துகொடுத்து விட்டார். டிக்ரீபாக்கிதாரனுடைய விண்ணப்பம் 1918 ஜனவரி 11-ல் பைசல் ஈராங்கிக்கு வந்தது. சப்கோர்ட்டார் 38 மதராஸ் 775-ன் தீர்மான நியாயத்தை அதாரிடியாகக் கொண்டு விண்ணப்பம் கொடுக்கு முன் எற்பட்ட விக்கிரய தஸ்தவேஜை ரெஜிஸ்டர்செய்யும்படி விக்கிரயதாரன் கோரிக்கொள்ள லாயக்குள்ளவராதலால் அது ரெஜிஸ்டராகும் பட்சத்தில் மனுதாரனுக்கு சொத்து பாத்தியதை கிரயத்தேதியிலிருந்தே நீங்கிப்போனதாக மதிக்கவேண்டுமென்றும் ஆகவே விண்ணப்பத்தேதியில் எல சொத்தில் ஹக்கு பாத்தியதையுள்ளவனாக ரூல் 89-ன்படி எலத்தை ரத்து செய்ய லாயக்குள்ளவரல்லவென்று அபிப்பிராயப்பட்டும் மனுவைத் தள்ளுபடி செய்துவிட்டார்கள். அதன்பேரில் மனுதாரன் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்ததில் சப்கோர்ட்டாருடைய அபிப்பிராயம் பிசகென்று தீர்மானிக்கப்பட்டு டிக்ரீபாக்கிதாரன் விண்ணப்பத்தேதியில் சொத்து பாத்தியதையை இழந்தவனாக மதிக்கத்தகாதென்று சொல்லி எலத்தை ரத்து செய்யும்படி உத்தாவளித்தார்கள்.

ஹைகோர்ட் தீர்மானத்தின் காரணச் சுருக்கமாவது:--38 மதராஸ் 775-ம் 34 அலகபாத் 186-ம் எதிர் மனுதாருக்கு அதாரிடிக்காக காட்டப்படுகின்றன. அவைகளில் விண்ணப்பத்தேதிக்குமுன் விக்கிரய நடவடிக்கையானது ரெஜிஸ்டரான தஸ்தவேஜுகளினால்பூர்த்தியாகியிருந்திருக்கின்றன. அவ்வித சந்தர்ப்பத்தில் மனுதாரன் மனுத்தேதியில் சொத்து பாத்தியதையிலிருந்து விலக்கப்பட்டவனாக மதிக்கப்பட்டு விண்ணப்பம் தள்ளுபடியாகியிருக்கிறது. தாவா கேஸுக்கு அது நேரான அதாரிடியல்ல.

தவிர மற்ற ஹைகோர்ட்டார்கள் இது விஷயமாய் மாறுதலான அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். அதாவது டிக்ரீ பாக்கிதாரனுக்கு தொகையைக் கட்டி எலத்தை ரத்து செய்வதற்கு எக்காலத்திலும் பாத்தியமுண்டென்றும் விண்ணப்பத்தேதிக்குமுன் எல சொத்தை மூன்றாவது மனிதனுக்குத்தானே விக்கிரயப்படுத்தின விஷயம் அந்த பாத்தியதைக்கு விரோதமாகாதென்றும் விளம்பியிருக்கிறார்கள். அவ்வித அபிப்பிராய பேதங்களைப்பற்றி யோஜிக்காமலே இந்தக் கேஸில் மனுதாருகானுமாய் உத்தாவளிக்கத்தகும். விண்ணப்பத்தேதியில் கிரயம் ரெஜிஸ்டராகாதபடி மனுதாரனுடைய சொத்து பாத்தியதை விலகிப்போகவில்லையென்று சொல்லவேண்டும். ஆகவே 89-வது பிரிவின்படி எலத்தை ரத்து செய்ய லாயக்குள்ளவராகும். 29-மதராஸ் 336-ல் புல்பெஞ்சார் தீர்மானித்திருக்கிறபடி ரெஜிஸ்டராகாத கிரயத்தின் கையோடு சொத்தின் சுவாதீனமும் மாறிப்போன சந்தர்ப்பத்திலும் சுவாதீனத்தைத் திரும்பியடைய (விக்கிரயத்தைப் பூர்த்திசெய்யாமல்) லாயக்குண்டாகையால் சுவாதீனத்தைக் கைவிடாத சந்தர்ப்பத்தில் ரெஜிஸ்டராகாத கிரய தஸ்தவேஜினால் மனுதாரன் சொத்து பாத்தியதையை இழந்தவனாகான். 40-மதராஸ் 1134-ல் 29-மதராஸ் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது. பின்னால் ரெஜிஸ்டராகும்பட்சத்தில் கிரயத்தேதியிலிருந்து சொத்து பாத்தியதை மாறிப்போனதாகுமானாலும் ரெஜிஸ்டராகுமட்டும் மனுதாரனே சொத்து பாத்தியதை உடையவனாகச் சொல்லவேண்டும்,

எதிரிக்காக எடுத்துக்காட்டப்பட்ட 8 M.L.J. 266-ம் 5 L.W. 234-ம் மனுதாரின் நிலைமைக்கு விரோதமான அதாரிடிகளல்ல. மனுதாரும் கிரயதாரனும் எலதாரனை மோசப்படுத்தினாரென்று சொல்லப்படுகிறது. அவ்வித மோசக்கருத்து யாதொன்றும் துலங்கவில்லை. விண்ணப்பத்திற்கு முந்தி எற்பட்ட விக்கிரயத்தை ரெஜிஸ்டர் செய்தால் விண்ணப்பத்தின் முறைக்கு பாதகமுண்டாகலாமென்று சந்தேகித்து அந்த தஸ்தவேஜை நமோதுக்குக் கொண்டுவாராமல் பின்னால் புதிய தஸ்தவேஜெழுதி ரெஜிஸ்டர் செய்த நடவடிக்கையானது பிசகென்றாவது மோசக்கருத்தென்றாவது சொல்லத்தகாது. கிரயதாரன் தனக்கனுகூலமான நடவடிக்கையை செய்து முடித்துக்கொள்ள சம்மதி கொடுத்தது மோசக்கருத்தல்ல. ஆகவே விண்ணப்பத்தேதியில் மனுதாரன் சொத்து பாத்தியதை உடையவராகும்.

ரெஜிஸ்டர் தஸ்தவேஜுக்கும் பின் சப்கோர்ட்டாருடைய உத்தரவு எற்பட்டமையால் உத்தரவு செய்த தேதியில் மனுதாரின் பாத்தியதை மாறிப்போயிருக்கிறதாக மதித்து சப்

கோர்ட்டார் விண்ணப்பத்தைத் தள்ளுபடி செய்திருக்கவேண்டுமென்று எதிரிக்காக ஆர்கியுமெண்டு செய்யப்படுகிறது. 24 பம்பாய் 400 அதாரிடியாகவும் எடுத்துக்காட்டப்படுகிறது. இந்த வாதத்தை ஒப்புக்கொள்ளத்தகாது. யாதொரு நடவடிக்கை பெண்டிங்கிலிருந்த பொழுது ஏற்படும் விக்கிரயமானது முடிவான தீர்மானத்திற்குட்படவேண்டும். மனுதாரனுக்கு விண்ணப்பம் விரோதமானால் மனு நடவடிக்கை பெண்டிங்கிலிருந்தபொழுது விக்கிரயம் பெற்றவரும் அந்த முடிவின் பலாபலனை அனுபவிக்க வேண்டியதே. சட்ட முறைப்படிக்கு விண்ணப்பக்காலத்திலிருந்த நிலமையைக் கவனித்துப் பைசல் தீர்மானம் கொடுக்கவேண்டுமேயல்லாது பின்னால் ஏற்படும் மாறுதல்களைக் கவனித்து முடிவான தீர்மானம் செய்யவேண்டிய கடமையல்ல யாதொரு தாவா அல்லது விண்ணப்பம் தாக்கலான பிறகு ஏற்படும் நடவடிக்கைகளைக் கவனித்துக் கோர்ட்டார் சில சந்தர்ப்பங்களில் யாதொரு உத்தரவளிக்கத் தகுமானாலும் அது கோர்ட்டாருடைய யுக்தானுஸாரமாகும். சாதாரணமாக விண்ணப்பத்தேதியில் மனுதாரனுடைய நிலமையைக் கவனித்து உத்தரவளிக்க வேண்டியதுதான் நியாயம். இந்தக் கருத்துக்கு விரோதமாக 24 பம்பாய் 400-ன் தீர்மானம் தோற்றப்படுமானால் அவ்வித தீர்மானம் சரியான சட்ட முறையாக அனுஷ்டிக்கத் தகாதென்று சொல்லவேண்டும்.

[ஏலமான பிறகு ஏலம் உறுதியாகுமுன் சொத்தை டிக்கிரீபாக்கிதாரன் சரியானவிலைக்கு மூன்றாவது மனிதனுக்கு விக்கிரயம் பேசி தஸ்தவேஜெழுதிக்கொடுத்து டிக்கிரீ தொகையை மட்டும் அட்வான்ஸாகப் பெற்றுக் கோர்ட்டில் கட்டி ஏலத்தை ரத்து செய்த பிறகு ரெஜிஸ்டர்செய்து கொடுத்து மிகுதித்தொகையைப் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்திருக்கலாம். அவ்வித சந்தர்ப்பத்தில் ஏலத்தை ரத்து செய்யுமட்டும் கிரயம் பூர்த்தியானதாக மதிக்கக்கூடாது. அதுமட்டும் சொத்து பாத்தியதை மனுதாரனைவிட்டு விலகினதாகச் சொல்லக்கூடாது. விக்கிரய தஸ்தவேஜுக்கு பதிலாக உடன்படிக்கைப் பத்திரமாக எழுதிக்கொடுத்திருந்தால் மேற்கூறிய சந்தர்ப்பத்தைக் காட்டி மனுதாரன் எதிராட்சேபணைக் கிடங்கொடாமலே ஏலத்தை ரத்து செய்திருக்கலாம். ப-ர்] 36. M. L. J. 298.

—o—

சீவ்ஜஸ்டிஸ், & சேஷகிரி அய்யர் - J.

(தஞ்சாவூர் ஜில்லா)

A. S. No 1 of 1918 அக்டோபர் 1918.

ராமசந்தாராவ் vs ராமசந்திரராவ்.

ராமோஜீபாவாஜீ என்றவர் தன்னுடைய சொத்துக்கள் யாவற்றையும் ஒரு ஸெட்டில்மெண்டு பத்திரத்தால் 10-வயதுள்ள பையனை புத்திரனாகஸ்வீகாரமெடுத்துக்கொண்ட காலத்தில் (1858-ல்) பின் வருமாறு விநியோகம் செய்துவிட்டார்:-சில சாமான்களையும் ரொக்கத்தையும் தாய்வழியில் ஒன்றுவிட்ட மகனுக்குக் கொடுத்துவிட்டுத் தாய் மாமன்களுடைய சந்ததியாருக்கு ஜீவனாம்சமாக நெல் தானிய மளிக்கப்பட்டு வரவேண்டுமென்றும் சில சொத்துக்களின் வருமானத்திலிருந்து தினந்தோறும் 6-பிராமணர்களுக்கு அன்னதானம் செய்து வரப்படவேண்டுமென்றும் தன் சகோதரிக்கு மஞ்சள் பரிசாக ரூ 25-செலுத்தி வரப்படவேண்டுமென்றும் இவைகள் நீங்கலான இதரமான சொத்துக்களை இரண்டு பாகமாய்ப் பிரித்து ஒரு பகுதியைத் தன்னுடைய ஸ்வீகார புத்திரன் அடைய வேண்டியதென்றும் மறு பகுதியைத் தன்னுடைய இரண்டு மனைவிமார்களும் சமபாகமாய்ப் பிரித்து அடையவேண்டியதென்றும் கட்டளையிட்டிருந்தார். துல்ஜாபாயி என்ற இளையமனைவியானவள் தன்னுடைய கால் பங்கை மரணபரியந்தம் அனுபவித்து வந்து தனக்குப் பின் இந்த தாவாவில் பிரதிவாதிக்கென்று உயில் சாஸனம் செய்துவிட்டாள். இளையதாரத்திற்கு உயில் சாஸனம் செய்ய அதிகாரம் கிடையாதென்றும் தன் கணவனுடைய ஏற்பாட்டினால் ஜீவதசை பாத்தியமுண்டேயொழிய ஸ்வதந்தரபாத்தியதை கிடையாதென்றும் ஸ்வீகார புத்திரன் வழியாக ஆட்சேபித்துப் பிரதிவாதியின் வசத்திற்கு வந்த சொத்துக்களை சுவாதீனமடையும் பொருட்டு தஞ்சாவூர் அடிஷனல் சப்கோர்ட்டில்

தாவா செய்தார். சப்கோர்ட்டார் வாதிக்கனுகூலமான தீர்ப்பளித்தார். ஹைகோர்ட்டார் அப்பீலில் மாறான அபிப்பிராயங்கொண்டு துல்ஜாபாயம்மாளுடைய உயில் சாஸன பாத்தியதையைக் காயப்படுத்தி முந்திய ஒரு வியவகாரத்தின் தீர்ப்பினால் ரீஜுடிகேடா என்னும் பாயிண்டில் பிரதிவாதி கட்டுப்பட்டிருந்த ஒரு அயிடத்தைத் தவிர்த்து மற்ற தாவா சொத்துக்களைப் பற்றி வாதி பாத்தியங் கொண்டாடத் தகாதென்று தீர்மான அபிப்பிராயங் கொடுத்தார்கள்

ஹைகோர்ட் தீர்மானத்தில் ஹானரபில் ஜஸ்டிஸ் சேஷகிரி அய்யரவர்கள் சொன்ன காரணங்களாவன:—

பாவாஜீ என்பவர் தன் மனைவிக்கு அளித்த சொத்து பாகத்தில் ஷெ யாளுக்கு ஸர்வ ஸ்வதந்தர பாத்தியதை உண்டாவென்றும் அந்த சொத்துக்களை அவள் உயில் சாஸனத்தால் விநியோகப்படுத்தலாமாவென்றும் இந்தக் கேஸில் தீர்மானிக்கவேண்டிய பாயிண்டாகிறதற்காக ஹானரபில் அட்வகேட் ஜெனரலவர்கள் (1874) 2. I.A. 7-ன் 14-யும், (1908) 35 கல்கத்தா 896-ன் பிரிவி கௌன்ஸில் தீர்ப்பையும் ஆதாரங்கொண்டு தாவா தஸ்தவேஜைப்போன்ற நன்கொடைகளால் ஸ்திரீகளுக்கு ஜீவதசை பாத்தியம் தான் ஏற்படுமென்று வாதிக்கிறார்கள். மேற்கூறிய இரண்டு கேஸ்களிலும் ஒருவன் சொத்துக்களைத் தன் குமாரத்திகளுக்கும் அவர்களுடைய குழந்தைகளுக்கும் என்று நன்கொடுத்திருப்பதைப் பிரிவி கௌன்ஸிலார் வியாக்கியானப்படுத்தி குமாரத்திகளுக்கு ஜீவதசை பாத்தியம் தான் உண்டென்று விளம்பியிருக்கிறார்கள். சாதாரணமாக ஹிந்துக்கள் தங்கள் சொத்துக்களைத் தங்கள் சந்ததிகள் அடைய விருப்பமுடையவர்களென்றும் குமாரத்தியும் அவளுடைய குழந்தைகளும் ஒன்று சேர்த்து எழுதியிருப்பதால் குமாரத்திக்கு ஜீவதசை பாத்தியந்தானென்று பிரிவி கௌன்ஸிலார் யூகித்திருக்கிறார்கள். குழந்தைகளின் பெயர் குறிக்கப்படாத காரணத்தால் மகளும் அவளுடைய குழந்தைகளும் பிரத்தியேகமாய் மதிக்கப்பட்டு இருவகையாரும் பொதுவாய் அனுபவிக்கவேண்டியதென்று சொல்லத் தகாது. "பெண்களும் அவர்களுடைய சந்ததியாகும்" என்று ஒரு மொத்தமான வகுப்பாகச் சுட்டிக்காட்டி சொத்து விநியோகம் செய்யப்பட்டிருக்கிறது. இந்தக் கேஸ்களில் பிரிவி கௌன்ஸிலார் கொண்ட கருத்தையும் நியாயத்தையும் பொதுவான அதாரிடியாக மதித்து ஸ்திரீகளுக்கென்று வைக்கப்படும் நன்கொடை ஏற்பாட்டில் ஸ்திரீகள் ஜீவதசை பாத்தியதையை மட்டும் அடைகிறதாகச் சொல்லக் கூடாது.

பிரதிவாதிக்காக எடுத்துக்காட்டப்படுகிற 30- அலகபாத் 84-ன் பிரிவி கௌன்ஸில் தீர்மானத்தில் நன்கொடை பாத்தியதையில் ஆண் பெண் இருவகையாருக்கும் வித்தியாஸம் இடையாதென்று விளம்பியிருக்கிறார்கள். நன்கொடையின் வாசகமானது ஸ்பஷ்டமாய் ஏற்பட்டிருந்தால் ஆணுக்கொருவித பாத்தியமும், பெண்ணுக்கொருவித பாத்தியமும் வித்தியாஸமாய் வாதிக்கப்பட நியாயமில்லை. வாரிஸ் முறைமைச் சட்டத்தை அனுஸரித்து விதவைகளுக்கு ஜீவதசை மட்டும் அனுபோக பாத்தியதை உண்டாகிற வண்ணமாய் ஹிந்து லாவில் ஸ்திரீகளுக்கு நன்கொடையளித்தாலும் அவர்களுக்கு ஜீவதசை பாத்தியதை தான் உண்டென்று சொல்லப்படாத காரணத்தால் தாவா நன்கொடை பெற்ற ஸ்திரீயானவள் ஸர்வஸ்வதந்தர பாத்தியதையை அடைந்ததாகச் சொல்லவேண்டுமென்று (1874) 24. W R. 395-ல் ஹானரபில் ஜஸ்டிஸ் மிட்டர் அவர்கள் விளம்பியிருக்கிறதை ஒப்புக்கொண்டு 30 அலகபாத் 84-ல் பிரிவி கௌன்ஸிலார் தீர்மான அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். ஸ்திரீகளுக்கு நன்கொடை சொத்தில் ஜீவதசை பாத்தியந்தானென்ற நியாயம் ஹிந்து லாவில் எங்கும் சொல்லப்படவில்லையென்று சந்தேகமில்லாமல் சொல்லலாம். வாதிக்காகச் சொல்லப்பட்ட 21 அலகபாத் 7-ன் காரணங்களைத் திர யோஜித்துப் பார்த்தபின் ஹானரபில் ஜஸ்டிஸ் மிட்டரவர்கள் 24 W. R. 395-ல் தீர்மான முடிவடைந்திருக்கிறபடியால் 30 அலகபாத்தின் தீர்மானத்தில் ஜஸ்டிஸ் மிட்டரவர்களுடைய அபிப்பிராயம் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. மதராஸ் ஹைகோர்ட்டிலும் பெண்ணினமென்ற நிலைமையானது நன்கொடையின் பாத்தியதைக்குக் குறையாகாதென்று தீர்மானித்திருக்கிறார்கள். 31. M. 179, 23, M. L J. 223,

(1914) M. W. N. 387, 26. M. L. J. 616, 27 M. L. J. 329 & (1917) M. W. N 78, இவைகளைப் பார்க்கவும்.

30 அலகபாத் கேஸுக்குமுன் ஏற்பட்டிருந்த இதமான ஹைகோர்ட்டுகளின் தீர்மானத்தை வாதிக்காக எடுத்துக்காட்டப்பட்டன. அவைகளை அதிகமாய் ஆராய்ந்துபார்க்கத் தேவையில்லை. 11-பம்பாய் 573-ல் சில நியாயங்கள் சொல்லப்பட்டிருக்கிறதை வாதிக்காகக் காட்டப்படுகிறது. சென்னை இராஜதானியில் ஹிந்துபுமான் ஸ்வீகார அதிகாரம் கொடுப்பதுடன் மனைவிக்கும் ஸர்வ ஸ்வதந்தா பாத்தியதையுடன் யாதொரு சொத்தைக் கொடுத்து விடுவது சம்பிரதாய விரோதமல்லவென்று சொல்லவேண்டும். அவ்வித ஏற்பாடு அஸம்பாவிதமாக மதிக்கத்தகாது. ஸ்வீகார புத்திரனுக்கும் தன் மனைவிக்கும் யாதொரு பொல்லாங்கு வாராதபடி தடுக்கும்பொருட்டே கணவன் மனைவிக்கென்று ஒரு பாகத்தை ஸ்வதந்தா பாத்தியதையுடனும் மறு பாகத்தை ஸ்வீகார புத்திரனுக்கென்றும் பிரித்துக் கொடுக்கிற சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

இரண்டாவதாக ப்ராபர்டி ஆக்டு 8-வது பிரிவைக் கவனித்து வேறுவிதமான கருத்து ஏற்படாத பட்சத்தில் ஒருவன் யாதொரு சொத்தைப் பாதீனப்படுத்திவிட்டால் தனக்குள்ள பாத்தியதை யாவற்றும் எதிரிக்குச் சென்றுவிட்டதாகும் நன்கொடை. யளித்தவனுக்கு ஸ்வதந்தர பாத்தியதை இருந்தால் தஸ்தவேஜின் வாசகத்தில் எவ்வித சந்தேகமும் இல்லாத பட்சத்தில் நன்கொடை பெற்றவனுக்கும் ஸ்வதந்திர பாத்தியதை உண்டென்று சொல்லவேண்டும் 30 அலகபாத் 84-ஐப் பார்க்கவும். நன்கொடை பெற்றவர் ஆண் பெண் என்ற இன வித்தியாஸத்தால் மேற்கூறிய நியாயம் வேற்றுமைப்படாது.

சில சந்தர்ப்பங்களில் பிரயோகிக்கப்படுகிற வசனங்களால், கர்த்தாவின் கருத்தை கவனிக்க வேண்டியதாகும். நன்கொடை பெற்றவனுடைய சட்ட நிலமையும் கவனிக்கப்படலாம். மொத்தத்தில் தஸ்தவேஜின் வசனங்கள் தெளிவாகவும் சந்தேகமின்றியும் ஏற்பட்டிராத சந்தர்ப்பத்தில் மட்டும் கர்த்தாவின் கருத்தையும் முறைமையையும் கவனித்து யாதொரு தீர்மானமடையவேண்டியதாகும்.

இந்தக் கேஸில் பாவாஜீ எழுதிவைத்திருக்கிற தஸ்தவேஜைப் பார்க்குமிடத்து ஸ்வீகார புத்திரனுக்கு ஒருவிதமாயும் விநியோக வசனங்கள் பேதிக்கப்படவில்லை. ஸ்வீகார புத்திரனுக்கு ஸர்வ ஸ்வதந்தர பாத்தியதை அளிக்கப்படவில்லையென்று சொல்லத்தகாதாகையால் மனைவிகளுக்கும் அவ்விதமாகவே ஸர்வ ஸ்வதந்தர பாத்தியதை ஏற்பட்டதாகச் சொல்லவேண்டும் அடியில் கண்ட சொத்துக்களை இனமாக அளித்துவிட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. தீர்வையில்லாமல் நிலத்தை அனுபவிக்கவிடுவது இனமென்று அகராதியில் சொல்லப்பட்டிருக்கிறது. தென் இந்திய மொராட்டியர்களுக்குள் இனம் என்ற பதம் அக்கருத்தால் வழங்கி வருகிறது. மற்றொரு அகராதியில் இனம் என்பது யாதொரு நிபந்தனையுமின்றி சாசுவதமாய் அளிக்கப்படுகிற கிராண்டென்று சொல்லப்பட்டிருக்கிறது. சிற்சில விநியோகங்கள் ஜீவதசை மட்டும் அளிக்கப்பட்டிருக்கிற போதிலும் மனைவிகளுக்காக ஏற்பட்டிருக்கிற விநியோகம் அதே கருத்தைக் கொள்ளவேண்டியதாக வாதிக்கப்படாது. ஆகவே துல்ஜாபாயம்மாளுக்கு தாவா சொத்தில் ஜீவதசை பாத்தியதை மட்டுமல்லவென்றும் ஸர்வ ஸ்வதந்தர பாத்தியதை உண்டென்றும் சொல்லவேண்டும் அப்படியானாலும் 7-மதராஸ் 387, 14 மதராஸ் 274 - இவைகளைக் காட்டி துல்ஜாபாயம்மாள் உயில் சாஸனத்தால் விநியோகப்படுத்தலாயக்கில்லையென்று வாதிக்காக ஆர்கியுமெண்டு செய்யப்படுகிறது. ஆனால் கணவனிடமிருந்து நன்கொடை பெற்ற மனைவி நன்கொடை சொத்தைப்பற்றி உயில் எழுத லாயக்குண்டென்ற 30 அலகபாத் 84-ன் தீர்மானம் மேற்கூறிய இரண்டு அதாரிடிகளுக்கு விரோதமாக இருக்கிறதென்று ஒப்புக்கொள்ளப்படுகிறது. நன்கொடை சொத்தை விதவையானவள் உயில் எழுதி வைக்கலாமென்பதற்கு 38 அலகபாத் 446-ம் ஒரு அதாரிடியாகிறது. மேற்கூறிய இரண்டு மதராஸ் தீர்மானங்களும் பிந்திய அலகபாத் தீர்மானங்களால் அடிபட்டுப் போச்சுதென்று சொல்லவேண்டும். இத்தியாதி காரணங்களால் ரீஜ-டி கோடாவால் இழந்து

போகப்பட்ட அயிடத்தைத் தவிர்த்து மற்ற சொத்துக்களைப் பற்றினமட்டில் வாதியின் தாவா தள்ளுபடியாச்சுது. 36. M L J. 306

—o—

புல்பெஞ்சு கேஸ்.

சீவ்ஜஸ்டிஸ், எய்லிங் &

குமாரஸாமி சாஸ்திரி - J.J.

மதராஸ்)

O. S. A. 69 of 1917-18 பிப்ரவரி 1919.

குலசேகர நாயகர் vs ஜகதாம்பாள் அம்மாள்.

ஹானரபில் ஜஸ்டிஸ் கூட்ஸ் டிராட்டரவர்கள் மதராஸ் ஹைகோர்ட் அசல் தரப்பில் நடந்த கேஸின் செலவுகளைப்பற்றி ரெஜிஸ்டிராரவர்கள் கணக்கிட்டதை ரிவியூ செய்து அளித்த உத்தரவின்பேரில் அப்பீல் செய்யத்தகுமாவென்ற பாயிண்டு புல்பெஞ்சுக்கு ரிபர் செய்யப்பட்டது. (1903) 17 M. L J. 569-ல் ஏற்பட்டிருந்த புல்பெஞ்சு தீர்மானத்தின்படி அப்பீல் செய்யத் தகுமாவென்ற பாயிண்டு புல்பெஞ்சுக்கு ரிபர் செய்யப்பட்டது. (1903) 17 M.L.J 569-ல் ஏற்பட்டிருந்த புல்பெஞ்சு தீர்மானத்தின்படி அப்பீல் கிடையாதென்றும் (1910) 35 மதராஸ் 1-21 M. L. J. 1-ன் பிரகாரம் செலவு தொகை விஷயமாய் ஏற்பட்ட உத்தரவானது செலவு தொகையைப்பற்றி மட்டும் ஏற்பட்ட உத்தரவான போதிலும் அது அப்பீலுக்கு லாயக்குள்ள ஜட்ஜிமெண்டாக மதிக்கப்படவேண்டுமென்றும் விபரீதமான தீர்மான அபிப்பிராயங்களேற்பட்டிருப்பதால் இந்த பாயிண்டு புல்பெஞ்சுக்கு ரிபராகி 35 மதராஸ் தீர்மான நியாயம் சரியானதென்று அனுஸரிக்கப்பட்டு அப்பீல் முறை உண்டென்று இந்தக் கேஸில் அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. (1914) 26 M, L. J. 357-ல் சீவ் ஜஸ்டிஸ் ஸர் ஆர்னல்டு உவைட்டு துரையவர்கள் சொல்லியிருக்கிற நியாயங்கள் மேற்கூறிய அபிப்பிராயத்திற்கு விரோதமில்லையென்று சொல்லப்பட்டது. சீவ்ஜஸ்டிஸ் ஸர் ஆர்னல்டு உவைட்டு துரையவர்கள் (1903) 17 M. L J. 569-ஐ அனுஸரிக்கக் கடமைப்பட்டவர்களாய் தங்கள் முன் வந்த கேஸின் சந்தர்ப்பங்களுக்கும் 17 M. L. J 569-ன் சந்தர்ப்பங்களுக்கும் வித்தியாஸமிருப்பதாய்க் காட்டிக் கொடுத்திருக்கிற அபிப்பிராய நியாயங்கள் இந்தக்கேஸில் புல்பெஞ்சார் கொடுத்த தீர்மான அபிப்பிராயத்திற்கு விரோதமல்லவென்றும் சொல்லப்பட்டது. 36. M. L. J. 359.

—o—

பிலிப்ஸ் & குமாரஸாமி சாஸ்திரிகள்-J. J.

(செங்கற்பட்டு ஜில்லா)

S.A. 813 of 1916 - 1 ஆகஸ்டு 1918.

ராஜம்பட்டர் vs சிங்காரம்மாள்.

ஒரு தேவாலயத்தில் பரிசாரக உத்தியோக பாத்தியதையை வாதி விக்கிரயம் பெற்றது ஜனப்பொது நலத்திற்கு விரோதமென்று இந்தக் கேஸின் சந்தர்ப்பத்தில் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. ஹைகோர்ட்டார் கொடுத்த அபிப்பிராயத்தின் காரணச் சுருக்கமாவது:—

விக்கிரயமான பரிசாரக உத்தியோகமானது மத சம்பந்தமான ஸேவகமென்று ருஜுவாகியிருக்கிறது. (வேத பாராயணம் செய்யும் உத்தியோகத்தை வேதாத்தியயனம் செய்திராதவனுக்கு மாற்றக்கூடாதுபோலவும் அர்ச்சனை மந்திரத்தை உச்சரிக்கிற உத்தியோகத்தை ஸ்திரீயானவள் விக்கிரயம்பெற்று வேலை நடத்திவரக்கூடாது போலவும் மத சம்பந்தமான காரியாதிகளை நடத்தவேண்டிய கிரியைகளை அந்நியனுக்கு மாற்றிவிடுவது ஒழுங்கல்லவென்று கருதப்படவேண்டும்.) தவிர வாதி விக்கிரயம் செய்த அல்லது பரிசாரக உத்தியோகத்தை வகித்து வந்த குடும்பத்தைச் சேர்ந்தவரல்லவென்றும் ருஜுவாகியிருக்கிறது. (1876) 1 மதராஸ் 235-ன் 252-ல் பிரிவி கௌன்ஸிலார் விளம்பியிருக்கிறபடி ஒரு டிரஸ்டியானவர் ஸ்வயலாபத்தைக்கருதி தன்னுடைய உத்தியோகத்தை மாற்றிவிடுவது வழக்கமுறையாகச் சொல்லப்பட்ட சந்தர்ப்பத்தில் அது சட்ட நியாயமான முறையல்லவென்று

விளம்பியிருக்கிறார்கள், வழக்க முறையைக் கவனிக்காமலே தர்மகர்த்தா தன்னுடைய உத்தியோகத்தைத் தன் இஷ்டப்பிரகாரம் மாற்றி விடலாமாவென்று யோஜித்து அவ்விதமான அதிகாரத்தைப் பிரயோகிப்பது நீதி முறைக்கும் நியாய ஒழுங்குக்கும் விரோதமென்றும் அவ்வித அதிகாரத்தை ஒப்புக்கொள்ளுகிற அதாரிடி யாதொன்றும் கிடையாதென்றும் பிரிவி கௌன்ஸிலார் மேற்கூறிய கேஸில் விளம்பியிருக்கிறார்கள். மத சம்பந்தமான உத்தியோகங்களையும் நிலமையையும் பாராதீனப்படுத்திவிடுவது பொதுவாய் சட்ட விரோதமென்று 6-மதராஸ் 76-லும் பிரிவி கௌன்ஸிலாரின் அபிப்பிராயத்தை அனுஸரித்துச் சொல்லியிருக்கிறார்கள். 24-மதராஸ் 219-ஐப் பார்க்கவும் அவ்வித விக்கிரயம் ஜனப்பொது நலத்திற்கு விரோதமென்று 26-மதராஸ 31, 33 மதராஸ் 350-இவைகளில் சொல்லப்பட்டிருக்கிறது. பிறப்பின் சிலாக்கியத்தாலாவது விவாக சம்பந்த நிலமையாலாவது அவ்வித உத்தியோகத்தை வகித்துவர யோக்கியமுடையவருக்கு மாற்றி விடுவது செல்லத் தக்க வழக்கமென்று 42 கல்கத்தா 455-ல் விளம்பியிருக்கிறது, அடுத்த வாரிஸ்தாரனுக்கு மாற்றிக்கொடுப்பதும் நியாயமென்று 6 பம்பாய் 298-ல் விளம்பியிருக்கிறது. இந்தக் கேஸில் கிரயம்பெற்ற வாதி முற்றிலும் அந்நியனாகையால் மேற்கூறிய தீர்மானங்களின் நியாயத்ஸதைப்பற்றி யோஜிக்கத்தேவையில்லை. 1 மதராஸ் 235 ன் பிரிவி கௌன்ஸில் தீர்மானம் பிந்திய தீர்மானங்களில் வாலாயமாய் அங்கீகரிக்கப்பட்டு வருகிறபடியால் வாதியின் விக்கிரயம் ஒப்புக்கொள்ளத் தகாதென்று சொல்லவேண்டும். 36 M. L. J. 355

புல்பெஞ்சு கேஸ்.

சீவ்ஜஸ்டிஸ், எய்லிங் &

குமாரஸாமி சாஸ்திரிகள் - J. J.

C. R. P. 150 of 1918-17 பிப்ரவரி 1919.

பத்மனப எப்பாரா - மனுதார்.

குண்டபுரம் டி-மு கோர்ட்டில் ஸ்மால்காஸ் தாப்பில் 1917-ம் வருஷத்திய நிறைவேற்றும் நடவடிக்கை ஒன்றில் மனுதார் தாகல் செய்த டிக்கிரீயின்பேரில் நடவடிக்கைகள் நடந்து 1917 ஸெப்டெம்பரில் முடிவு பெற்றன. சில தினங்களான பிறகு மனுதாரினால் தாகல் செய்யப்பட்டிருந்த டிக்கிரீயானது சிருஷ்டனையென்று டி-மு கோர்ட்டாருக்குத் தெரியவந்தமையால் சிருஷ்டனைக்குக் காரணமான நபர்களின்பேரில் இ. பி. கோ. 193, 463 466, 468, 471 - ஆகிய பிரிவுகளின்படி குற்றஞ்சாட்டி பிராஸிகியூஷன் செய்யும்படி யோஜித்துப்பார்த்து மனுதாரை ஷை குற்றங்களுக்காக பிராஸிகியூஷன் செய்யும்படி கிரிமினல் புரொஸிஜர் கோடு 476-வது பிரிவின்படி உத்தரவளித்தார்கள்.

அவ்வித உத்தரவானது அதிகார வரம்பின்றி ஏற்பட்டதாகையால் அதை ரத்து செய்யவேண்டுமென்று மனுதார் ஹைகோர்ட்டில் ரிவிஷன் விண்ணப்பம் கொடுத்தார். ஷை விண்ணப்பத்தை ஏராங்கி கேட்ட ஹானரபில் ஜஸ்டிஸ் பிலிப்ஸ் துரையவர்களும் ஜஸ்டிஸ் நேபியர் துரையவர்களும் நிறைவேற்றும் நடவடிக்கைகள் முடிந்த பிறகு 476-வது பிரிவின்படி பிராஸிகியூஷனுக் குத்தரவளிப்பது சட்ட முறைபல்லவென்ற மனுதாரின் ஆட்சேபனையை ஏற்றுக்கொள்ளாமலும் 32-மதராஸ் 49-ல் புல்பெஞ்சார் கொடுத்திருக்கிற அபிப்பிராயத்திற்குரிய சந்தர்ப்பங்கள் இந்தக் கேஸில் இல்லையென்ற காரணத்தால் அந்தக்கேஸின் தீர்மான அபிப்பிராயத்தை அனுஸரித்து டி-மு கோர்ட்டாருடைய உத்தரவைக் காயப்படுத்த மனமில்லாமலும் ஆனால் 476-வது பிரிவின் பிரயோகத்தைப்பற்றி பற்பல ஜட்ஜிமார்கள் சொல்லியிருக்கிற வியாக்கியானங்களைக் கருதிப் பின் வரும் பாயிண்டை புல்பெஞ்சாருடைய அபிப்பிராயத்திற்கு ரிபர் செய்தார்கள்

அதாவது:—நியாயப் பரிபாலன நடவடிக்கைகள் முடிந்துபோன பிறகு ஆனால் அவைகளின் தகவல்கள் கோர்ட்டாருடைய மனதிலிருந்து விலகாத காலத்திற்குள் குற்றம் நடந்த தகவல் கோர்ட்டாருக்குத் தெரிய வந்த சந்தர்ப்பத்தில் கிரிமினல் புரொஸிஜர் கோடு 476-வது பிரிவின்படி பிராஸிகியூஷனுக் குத்தரவளிக்கலாமாவென்ற பாயிண்டைப்பற்றி புல் புஞ்சபிப்பிராயங் கோறப்பட்டது.

புல்பெஞ்சார் ஒரே அபிப்பிராயமாக நீதி பரிபாலன நடவடிக்கைகள் முடிந்தபின் 476-வது பிரிவின்படி பிராஸிகியூஷன் உத்தரவளிக்கத் தகாதென்று அபிப்பிராயங் கொடுத்தார்கள். ஹானரபில் ஜஸ்டிஸ் குமாரசாமி சாஸ்திரிகள் கொடுத்த அபிப்பிராயத்தில் 195-வது பிரிவின்படி யாதொரு உத்தியோகஸ்தரை கிரிமினல் கோர்ட்டில் பிராது கொடுக்கும்படி உத்தரவளிக்கலாமென்று சொன்னார்கள்.

புல் பெஞ்சு தீர்மானத்தின் காரணச் சுருக்கமாவது:—32 மதராஸ் கேஸில் ஸிவில் நடவடிக்கை நடந்த காலத்திலேயே குற்றம் நடந்த தகவல் கோர்ட்டாருக்குத் தெரியவந்தபோதிலும் ஸிவில் நடவடிக்கைகள் முடிந்து 20 தினங்களுக்குப் பிறகு தாமதத்திற்குக் காரணம் யாதொன்றும் சொல்லப்படாமல் 476-வது பிரிவின்படி பிராஸிகியூஷன் உத்தரவளிக்கப்பட்டிருக்கிறதை சட்ட விரோதமென்று நிராகரிக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கேஸில் நிறைவேற்றும் நடவடிக்கை முடியுமட்டும் டிக்கிரீயானது சிருஷ்டனை தஸ்தவேஜென்று கோர்ட்டாருக்குத் தெரியாது. ஆகவே மேற்கூறிய புல்பெஞ்சு தீர்மானம் தாவா கேஸின் சந்தர்ப்பத்திற்கு ஆதாரமில்லாததென்று சந்தேகிக்கப்பட்டபோதிலும் புல்பெஞ்சார் கொடுத்திருக்கிற அபிப்பிராய வசனங்கள் தாவா கேஸின் சந்தர்ப்பத்தையும் உட்படுத்துகிறதாகச் சொல்லவேண்டும். ஐந்து ஜட்ஜிமார்கள் சேர்ந்த புல்பெஞ்சியில் யாதொரு நடவடிக்கை பெண்டிங்கிலிருந்த காலத்தில் செய்யப்பட்ட குற்றத்திற்காக ஷை நடவடிக்கைகள் முடிவாகுமுன் அல்லது முடிந்தகையோடு தொடர்ந்த நடவடிக்கையாக மதிக்கத்தக்கதாய் 476 - வது பிரிவின்படி பிராஸிகியூஷன் உத்தரவளிக்கவேண்டுமென்று அபிப்பிராயங் கொடுத்திருக்கிறார்கள். அதற்குமுன் ஏற்பட்டிருந்த 31 மதராஸ் 141-ன் 146 ஐ புல்பெஞ்சார் உறுதிப்படுத்தி யிருக்கிறார்கள். குற்றம் நடந்த தகவல் நடவடிக்கை முடிந்த பின் தெரியவந்த காரணமானது மேற்கூறிய புல்பெஞ்சின் தீர்மான நியாயத்தை இந்தக் கேஸின் சந்தர்ப்பத்தில் அவமதிக்கப் போதுமானதல்ல, ஆகவே டி-முகோர்ட்டார் அளித்தஉத்தரவானது சட்ட விரோதமென்று அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது. (சிருஷ்டனை டிக்கிரீயைக்கொண்டு காரியத்தை முடித்துக்கொண்டபிறகு கள்ளத்தனம் வெளியானால் நஷ்டமடைந்த பார்ட்டி ஸிவில் டாமேஜுக்குச் செல்லும் முறையுண்டென்றும் குற்றவாளியைக் கண்டனம் செய்ய ஹானரபில் ஜஸ்டிஸ் குமாரஸாமி சாஸ்திரிகள் சொன்ன முறையை அனுஷ்டிக்கலாமென்றும் கவனிக்கவும் - ப. ர்.) 36 M. L. J. 352.

—o—

சில தீர்ப்புச் சுருக்கங்கள்.

ஒல்ட் ஃபீல்டு & சேஷகிரி அய்யர்-J. J.

C. M. A. 295 & C. R. P. 1225 of 1918 - 6 மார்ச்சு 1919.

நிறைவேற்றும் நடவடிக்கையில் யாதொரு சொத்து ஏலம் போடப்பட்டு உயர்ந்த தொகைக்கு ஏலம் கோறினவர் பின் வாங்கக்கூடாதென்ற நிபந்தனையானது ஏல விளம்பர நோட்டீஸில் குறிக்கப்படாதிருந்த சந்தர்ப்பத்தில் உயர்ந்த தொகைக்கு ஏலம் கோறினவர் காலஞ்சென்றுவிடவே அடுத்த குறைவான தொகைக்கு ஏலம் கோறினபரைக் கோர்ட்டார் ஏலமெடுத்தவராய் நிர்ணயித்து அவர் குறித்த வாய்தாவில் தொகையைக் கட்டத் தவறினபடியால் மறு ஏலம்போட உத்தரவளித்தார்கள். இதனால் ஏற்படும் நஷ்டத்தை தொகை கட்டத் தவறினவர் வகிக்கவேண்டிய முறையாகுமாதலால் ஷை யார் தன்னை ஏலமெடுத்தவராய்க் கோர்ட்டார் நிர்ணயித்த உத்தரவானது சட்டவிரோதமென்று ஹைகோர்ட்டில் சில்லரை மனு அப்பீல் தாகல் செய்ததில்,

(1) அப்பீல் செய்தவர் ஸி. பி. ஸி. 47-வது பிரிவின் கருத்திலடங்கியதாய் டிக்கிரீ பாக்கிதாரனுக்குப் பிரதிநிதியாக மாட்டாரென்றும் ஆகவே அவருக்கு நிறைவேற்றும் நடவடிக்கையில் செய்யப்பட்ட உத்தரவைப்பற்றி அப்பீல் செய்ய அதிகார முறை கிடையாதென்றும்,

(2) ஒரு ஏல நடவடிக்கையில் ஏலம் கோறுகிறவனுடைய கோறிக்கையைக் கோர்ட்டார் நியாயமானபடி தாமதமில்லாமல் ஏற்றுக்கொண்டதாகவும் அல்லது மறுத்துவிட்டதாகவும் தெரிவிக்கவேண்டுமென்றும் - (உயர்ந்த தொகைக்குக்

கோறினவர் இறந்த பிறகு கோர்ட்டார் அடுத்த வரை ஏலதாரனை நிர்ணயித்தமையால் ஏலத் தேதியிலிருந்து அடுத்தவரை நிர்ணயித்தகால மட்டும் ஏற்பட்ட தாமதத்திற்கு உயர்ந்த துகைக்கு ஏலங்கோறினவர் இறந்தபோன விஷயம் காரணமாகச் சொல்லத்தகாதென்பது போலும்)

(3) ஒரு ஏல சமயத்தில் உயர்ந்த துகைக்கு ஒருவன் கோறிவிட்டால் முந்திய கீழான துகைக்கு ஏலங்கோறினதைக் கோர்ட்டார் ஒப்புக்கொள்ளவில்லையென்று அனுமானிக்கவேண்டுமென்றும் குறைந்த துகைக்கு ஏலம் கோறினவர்களின் நிலமையானது விலக்கப்பட்டதாகச் சொல்லவேண்டுமென்றும் ஆகவே உயர்ந்த துகைக்கு ஏலம் கோறினவர் பின்னால் இறந்து போனாலும் அவர் ஏலம் கோறினகாலத்தில் அப்பீல் மனுதாராகிய அடுத்த படியிலுள்ளவரின் ஏலக்கோறிக்கை நிலையற்றுப் போச்சுதென்று மதிக்கப்படவேண்டுமென்றும்,

(4) ஆகவே அப்பீல் மனுதாரரை ஏலதாராராகக் கீழ் கோர்ட்டார் நிர்ணயித்த உத்தரவானது அதிகாரவரம்பின்றிச் செய்யப்பட்டதாகச் சொல்லவேண்டுமென்றும்,

இந்தக் கேஸில் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

—o—

சீவ்ஜஸ்டிஸ் & எய்லிங்-J.

A. S. 122 of 1918-26 பிப்ரவரி 1919.

ஒரு ஹிந்து விதவை தன் கணவனுடைய சொத்துக்களை வாரிஸ் பாத்தியதையால் அடைந்து அனுபவிக்கையில் தன் கணவன் தனக்கு ஸ்வீகார அதிகாரம் கொடுத்திருப்பதாய் ஒரு உயில் சாஸனத்தைப் போற்றினதை அனந்தர வாரிஸ்தார் ஆட்சேபித்து உயில் சிருஷ்டமே யென்று சொல்லி ஸ்பெஸிவிக் ரிலீவ் ஆக்டு 42-வது பிரிவின்படி (Specific Relief Act) தாவா செய்யலாமென்று 35. M. L. J. 144-ஐ அனுஸரித்து 35 மதராஸ் 592-ஆக் குறித்துக் காட்டி தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

—o—

எய்லிங் & நேபியர் - J.J.

S. A. 1061 of 1917 - 19 மார்ச்சு 1919.

ஒரு நிறைவேற்றும் நடவடிக்கையில் ஜப்தியான சொத்தில் தனக்கு பந்தக பாத்தியமுண்டென்றும் ஆகவே தன்னுடைய பாத்தியதைக்கு உட்படுத்தி ஜப்தி சொத்தை ஏலம்போடவேண்டுமென்றும் கோறிக்கொண்ட விண்ணப்பமானது ஸி பி. வி. ஆர்டர் 21 ரூல் 58-ன் படியுள்ள பாத்தியமனுவாகுமென்றும் அந்த மனு தள்ளுபடியாகும்பட்சத்தில் ஒரு வருஷகாலத்திற்குள் ஆர்டர் 21 ரூல் 63-ன்படி தன்னுடைய பாத்தியதை ஸ்தாபிக்கும்பொருட்டு அசல் தாவா செய்யாமல் பந்தகப் பத்திரத்தின்பேரில் பாக்கித்துகைக்காக தாவா செய்யக்கூடாதென்றும் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

—o—

ஓல்ட் வீல்டு & சேஷகிரி அய்யர்-J.J.

C M. S. A. 17 & C. R. P. 337 of 1918 - 18 மார்ச்சு 1919.

யாதொரு அடமான தஸ்தவேஜில் கண்ட துகை பூராவையும் அடமானம் வைத்தவருக்குச் செலுத்தாமல் பாக்கி வைத்திருந்தால் அந்த பாக்கியைப்பற்றி நஷ்டப்பரிகார தாவா செய்யவேண்டும். அவ்வித பாக்கித்துகையானது அடமானம் வைத்தவருக்குச் சேரவேண்டிய கடன் பாக்கியாக மதிக்கத்தகாதென்றும் ஆகவே அடமானம் வைத்தவர்மீது வெண்ணலை டிக்கிரீ பெற்றவர் செலுத்தப்படவேண்டிய அடமானத் துகை பாக்கியை யாதொரு கடன் பாக்கியாக ஜப்தி செய்யத் தகாதென்றும் தவிர நஷ்டப்பரிகாரத்தில் கிடைக்கக்கூடிய துகையை ஸி.பி.வி. 60 (1) ல-வது பிரிவின்படி ஜப்தி செய்ய லாயக்கில்லையென்றும் தீர்மான அபிப்பிராயங் கொடுக்கப்பட்டது.

—o—

224706

OPINIONS.

The Honourable Justice T. V. Seshagiri Aiyer, writes as follows:—The Editor Mr N. Subramania Aiyar has taken care to select only such of the cases as may interest the litigant public. He has stated the facts of the case and the points arising for decision with exactitude and care. I am of opinion that the publication is a useful one I hope that the information conveyed will be availed of to keep the reader back from unnecessary litigation and not to help unrighteous work in Courts.

M. R. Ry. T. R. Venkatarama Sastri B. A., B. L, says:—The report is in clear and intelligible Tamil and the reader will have no difficulty in understanding it.

The Madras Mail:—The Journal contains much useful information on lega subjects

The Hindu states:—The Journal supplies a long felt want by the Tamil speaking public and we hope it will attain the success it deserves.

The Honourable Mr. T. Rangachariar Avl, B A., B L.,—I have perused with great interest several parts of the Tamil Law Journal otherwise known as Vyavahara Chintamani. Mr N. Subramania Aiyar, the Editor, has had considerable experience in legal matters. The Journal is ably edited. The cases are selected with great care and will be of immense use to the litigant public.

The Madras Law Journal states as follows:—The Tamil Law Journal (Vyavahara Chintamani) we are glad to find has already obtained a substantial amount of support and appreciation. So far as we have been able to see the selection of cases seems to be done with much care and the statement of facts and the decision in each case is accurate.

அபிப்பிராயங்கள்.

ஹானரபில் ஜஸ்டிஸ் டி. வி. சேஷகிரி அய்யரவர்களின் அபிப்பிராயமாவது;—பத்திராதிபாகிய மிஸ்டர் என். சுப்பிரமணிய அய்யர் வியவகாரஸ்தர்களுக்கு ஸ்வாரஸ்யமாயிருக்கத்தக்க கேஸ்களைமட்டும் அதிக ஜாக்கிரதையாய்த் தெரிந்தெடுத்துப் பிரசுரம் செய்துவருகிறார். ஒவ்வொரு வழக்கின் சாராம்சங்களையும் தீர்மானிக்கப்படவேண்டிய பாயிண்டுகளையும் அதிக நேர்மையோடும், ஜாக்கிரதையோடும் எடுத்துக்காட்டியிருக்கிறார். இவ்விதப் பிரசுரம் பிரயோஜனமுள்ளதென்று நான் அபிப்பிராயப்படுகிறேன். அதில் வெளியாகிற தகவல்களைப் படித்தறிகிறவர்கள் அனாவசியமான வழக்குகளில் பிரவேசிக்காமலும் கோர்ட்டார்களுக்கு அதர்மமான வழக்குகளைப்பற்றிய வேலைக்கிடங்கொடுக்காமலுமிருப்பார்களென்று நம்புகிறேன்.

"மதராஸ் மெயில்":—இந்த தமிழ் லா ஜர்னலில் சட்ட சமாசாரங்களைப்பற்றி அதிக உபயோகமான தகவல்கள் அடங்கியிருக்கின்றன.

"ஹிந்து":—தமிழ் பேசும் ஜனங்களால் நெடுநாளாய் உணரப்பட்ட ஒரு குறையை இந்த ஜர்னல் நிவர்த்தி செய்கிறது. அது பெறவேண்டிய மேன்மையை அடையுமென்று நம்புகிறோம். சட்ட சம்பந்தமான அறிவைப் பரவச்செய்து அனாவசியமான வழக்குகளைத் தடுப்பதே இந்த ஜர்னலுடைய முக்கிய நோக்கமாகும்.

ம-ா-ா-ஸ்ரீ, ஹைகோர்ட் வக்கீல் டி. ஆர். வெங்கடராம சாஸ்திரியாரவர்கள்:—இதில் பிரசுரம் செய்யப்பட்டிருக்கிற வியவகாரங்கள் ஜாக்கிரதையோடு தெரிந்தெடுக்கப்பட்டிருப்பதும் தவிர, அவைகள் தெளிவான ஸ்பஷ்டமான தமிழில் எழுதப்பட்டிருக்கிறபடியால் அதைப் படிக்கிறவர்களுக்கு அதன் கருத்துகள் அர்த்தமாவதில் யாதொரு கஷ்டமும் இராது.

ஹானரபில் மிஸ்டர் டி. ரங்காச்சாரியாரவர்கள் எழுதுகிறார்:—வியவகார சிந்தாமணியின் பற்பல பிரதிகளை அதிக ஆவலோடு பார்வையிட்டேன். பத்திராதிபராகிய மிஸ்டர் என். சுப்பிரமணிய அய்யர் சட்ட விஷயத்தில் அதிக அனுபோகமுடையவர். அதிக திறமையோடு பத்திரிகை நடத்தப்பட்டு வருகிறது. வியவகாரிகளுக்கு மிகவும் பிரயோஜனமுள்ளதாய் அதிக ஜாக்கிரதையோடு கேசுகள் பிரசுரம் செய்யப்படுகின்றன. இந்த பிரயத்தினம் ஜயமடையக் கோருகிறேன்.

சட்ட பாயிண்டுகளின் ஜனனபூமியாகிய மைலாப்பூரில் பிரசுரமாகும் 'மதராஸ் லா ஜர்னல்' என்னும் ஆங்கிலேய ஜர்னலின் அபிப்பிராயத்தில்;—வியவகார சிந்தாமணி பெருத்த மதிப்பையும் ஆதரணையையும் அடைந்துவிட்டதைக் கண்டு களிக்கிறோம். நாம் பார்வையிட்டமட்டில் ஒவ்வொரு கேஸின் விஷயங்களும் தீர்மான முடிவுகளும் உள்ளபடி வரையப்பட்டிருக்கின்றன.

தென் இந்திய வியவகார சிந்தாமணி.

மாதப்பிரசுரம்—வருஷ சாதா ... ரூ. 5 0 0

ஆறுமாதத்திற்கு ... ... ரூ. 3 0 0

1913ஞு ஜுலை முதல் பிரசுரிக்கப்பட்டிருக்கிற மூன்று வாலியூம்களும் அட்டவணையுடன் பயிண்டான புஸ்தகம் (1200 - பக்கமுள்ளது) நமது சந்தாதாரர்களுக்கு ... ... ரூ. 5 0 0

மற்றவர்களுக்கு ... ... ரூ. 7 8 0

என். சுப்பிரமணிய அய்யர்,

தமிழ் லா ஜர்னல் ஆபீஸ், வேப்பேரி, சென்னை.

விளம்பரம் தேவை.